02.11.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**இன்றும், நாளையும் மழை கொட்டுமாம்!**

சென்னை:'தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்றும், நாளையும் கன மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மாவட்ட கலெக்டர்கள் உஷாராக இருக்கும்படியும் அரசு உத்தரவிட்டுள்ளது. வடகிழக்கு பருவ மழை துவங்கியுள்ளதால், சில நாட்களாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில், பரவலாக மழை பெய்து வருகிறது. காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகை, தேனி மற்றும் டெல்டா மாவட்டங்கள் என, மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில், நேற்று கனமழை பெய்தது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், நேற்று விட்டு விட்டு மழை பெய்தது; சில பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

'தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில், அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும். சென்னையிலும் மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த, 24 மணி நேரத்தில், தேனி, திண்டுக்கல், நாமக்கல் மற்றும் சிவகங்கையில் அதிகபட்சமாக, 7 செ.மீ., மழை பெய்துள்ளது.

கலெக்டர்கள் உஷார்:மழைக்காலத்தை ஒட்டி எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க, வருவாய்த்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம், அந்தத் துறையின்

அமைச்சர் உதயகுமார் தலைமையில், சென்னை எழிலகத்தில் நேற்று நடந்தது.

அப்போது, மழை தீவிரமடைவதால், கலெக்டர்கள் உஷார் நிலையில் இருக்க வேண்டும்; வருவாய் நிர்வாக ஆணையர், மாவட்ட கலெக்டர்களுடன் தொடர்பில் இருந்து, மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டது.

நிவாரணம் உயர்வு:இதற்கிடையில், மழையால் ஏற்படும் உயிர் இழப்புக்கான நிவாரண தொகையை, 2.50 லட்சம் ரூபாயில் இருந்து, 4 லட்சம் ரூபாயாக அரசு உயர்த்திஉள்ளது.

அதேபோல, மாடுகள் இறப்புக்கான நிவாரண தொகை, 30 ஆயிரமாகவும், ஆடுகள் இறப்புக்கான நிவாரணம், 3,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. முழுதும் சேதமடைந்த வீடுகளுக்கு, 5,000 ரூபாயும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு, 2,500 ரூபாயும் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

398 வீடுகள் சேதம்:சென்னையில் நேற்று நடந்த வருவாய் துறை அதிகாரிகள் ஆலோசனை கூட்டத்திற்குப் பின், வருவாய் நிர்வாக ஆணையர் அதுல்ய மிஷ்ரா கூறியதாவது:வடகிழக்கு பருவ மழையால், இதுவரை, 398 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில், 88 வீடுகள் முழுமையாகவும், 310 வீடுகள் பாதியளவும் சேதமடைந்துள்ளன; 88 ஆடு, மாடுகள் இறந்துள்ளன. இதற்கு உரிய நிவாரணம் வழங்கப்படும். மழைக்கால பாதிப்பை தடுக்க, மாவட்ட நிர்வாகம் உஷார்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிகள், சமூக நலக்கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## தொடர் மழையால் உயரும் அணைகளின் நீர்மட்டம்

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் நேற்று முன் தினம் பெய்த மழையால், அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக மதுரை சாத்தையாறு அணையில் 100மி.மீ., மழை பதிவானது.

சில நாட்களாக இம்மாவட்டங்களில் மாலையில் லேசான சாரலுடன், மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் ஓரளவிற்கு மழை பெய்கிறது.நேற்று முன் தினம் பெய்த மழையளவு(மி.மீ.,):

பெரியாறு அணை 178.அ, தேக்கடி158., கூடலுார் 21, சண்முகா நதி 18, உத்தமபாளையம் 275, வீரபாண்டி 50, வைகை 386., மஞ்சளாறு 17, மருதாநதி10, பேரணை கஅ.ச, குப்பணம்பட்டி 152 மதுரைநகர் 11, சாத்தையாறு , மேட்டுப்பட்டி 20, கள்ளந்திரி அ, சிட்டம்பட்டி கஅ.ந, புலிப்பட்டி 5.4, மேலுார் 32, தனியாமங்கலம் 45, இடையபட்டி 88 விரகனுார் 112, கொடைக்கானல்3என்ற அளவில் மழை பதிவானது.

அணைகளுக்கு நீர் வரத்து: பெரியாறு அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 4858, கன அடியாக உள்ளது. வெளியேற்றம் 517 அடி. வைகை வரத்து 735 வெளியேற்றம்585சோத்துப்பாறை வரத்து 128வெளியேற்றம் 3. மஞ்சளாறு வரத்து 172வெளியேற்றம்172மருதாநதி வரத்து 40 வெளியேற்றம் 40 சாத்தையாறு, சண்முகாநதி வரத்து, வெளியேற்றம் இல்லை.

## சோத்துப்பாறை அணை நிரம்பியது

தேனி : தொடர் மழை காரணமாக தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே சோத்துப்பாறை அணை நிரம்பியது. அணையின் நீர்மட்டம் முழு

கொள்ளளவான 126 அடியை எட்டியதை அடுத்து உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

**சென்னை, மதுரையில் பரவலாக மழை**

சென்னை : வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் இன்று காலை முதல் சென்னையில் கிண்டி, வடபழனி, கோடம்பாக்கம், சாலிகிராமம் உள்ளிட்ட பகுதிகளிலும், மதுரையின் பல இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

**தண்ணீர் திறப்பு குறைப்பால் வேதனை, 34 நாட்கள் தானா? 75 நாட்களாவது வழங்க எதிர்பார்ப்பு**

பொள்ளாச்சி: 'ஆழியாறு படுகை பாசனத்தில், குறைந்தபட்சம், 75 நாட்களாவது தண்ணீர் வழங்க வேண்டும்,' என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

பொள்ளாச்சி அருகே உள்ள, ஆழியாறு அணை பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்துக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, பழைய ஆயக்கட்டு மற்றும் குடி நீருக்கும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது.

இந்தாண்டு புதிய ஆயக்கட்டுக்கு தண்ணீர் திறக்கும் போது, 60 நாட்கள் தண்ணீர் வழங்க விவசாயிகள் கோரினர். அதிகாரிகள், 45 நாட்கள்

வழங்குவதாக தெரிவித்து, பின், 34 நாட்களாக குறைத்து விட்டனர். இதனால், விரக்தியடைந்த விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்ணீர் வழங்கும் நாட்களை குறைக்காமல் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், அரசு உத்தரவின் பேரில், 34 நாட்களுக்கு தண்ணீர் வழங்கும் வகையில், நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. மொத்தம் 135 நாட்களில், உரிய இடைவெளி விட்டு 34 நாட்களுக்கு, மொத்தம், 1,209 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே வழங்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தண்ணீர் திறக்கப்பட்டதால், மகிழ்ச்சியடைந்த விவசாயிகள், நாட்கள் குறைக்கப்பட்டுள்ளதால் வேதனையடைந்துள்ளனர். தண்ணீர் திறப்பு நாட்களை அதிகரிக்க வேண்டும் என அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

## வடகிழக்கு பருவமழை துவக்கம், உஷாரய்யா உஷாரு! சிறப்பு மருத்துவக்குழு அமைப்பு

உடுமலை: வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதையடுத்து, உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், கடந்த இரு நட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மழை காலத்தில் கால் நடைகளை தாக்கும் நோய்க்கிருமிகள் அதிகரிக்கும் என்பதால், அவற்றை கட்டுப்படுத்தவும், நோய் தாக்காமல் இருக்கவும், கால்நடை துறை சார்பில், சிறப்பு மருத்துவக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

உடுமலை சுற்றுப்பகுதியில் கால்நடை வளர்ப்பு பிரதானமாக உள்ளது. இப்பகுதியில், 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. மழை காலங்களில் கால்நடைகளுக்கு

நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற கால்நடைத்துறை அறிவுறுத்தியுள்ளது.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை அவசியம்**

கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: பருவகால மாற்றத்தின் போது, கால்நடைகளை பல்வேறு நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. இக்காலங்களில், கால்நடைகளின் இறப்பு விகிதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு இறப்பு நிகழும் நேரங்களில், கால்நடைகளுக்கு தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். கால்நடை வளர்ப்போரில் பலரும், அதனை பின்பற்றாமல் விடுவதால், கால்நடைகளுக்கு எளிதில் நோய்த்தொற்று ஏற்படுகிறது.

**எப்படி ஏற்படுகிறது?**

மழைக்காலத்தில், கொசு உற்பத்தி அதிகரிப்பு, கால்நடைகளை பராமரிக்கும் இடங்களில் தண்ணீரை தேங்க விடுவது, சுகாதாரமின்மை போன்ற காரணங்களால் இவை ஏற்படுகின்றன.

தொண்டை அடைப்பான், துள்ளுமாரி, கோமாரி நோய், சப்பை நோய் போன்றவை மழைக்காலத்தை சாதகமாக பயன்படுத்தி, கால்நடைகளை தாக்குகிறது. பருவமழை தற்போது துவங்கியுள்ளது. கால்நடைகளுக்கு இறப்பு ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் தெரிவிக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிறப்பு மருத்துவ குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நோய்த்தடுப்பு ஆலோசனை:** ஒரு ஒன்றியத்துக்கு, ஒரு குழு என்ற விகிதத்தில், உடுமலை கிழக்கு, மேற்கு, குடிமங்கலம் மற்றும் மடத்துகுளம் ஒன்றியங்களில், கால்நடை மருத்துவர்கள் மற்றும் ஆய்வாளர்கள்

கொண்ட குழு செயல்படுகிறது. இக்குழுவினர், சுற்றுப்பகுதிகளில் கால்நடைகளை ஆய்வு செய்து, நோய் தடுப்புக்கான ஆலோசனை வழங்கி வருகின்றனர். இறக்கும் கால்நடைகளின் மாதிரி உடற்கூறுகள், கோவை கால்நடை புலனாய்வுத்துறைக்கு அனுப்பப்படுகிறது. இதன் பின்னர், நோய் தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு, கால்நடைத்துறை அதிகாரிகள் கூறினர்.

**துவங்கியது வடகிழக்கு பருவமழை அமர்க்கள ஆரம்பம்! வெள்ளத்தில் மிதந்தன வாகனங்கள்**



கோவை : கோவை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கனமழை எதிரொலியால், பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளானது.

தமிழகத்துக்கு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ காலங்களில் மழை பொழிவு இருந்து வருகிறது. இந்தாண்டு தென்மேற்கு பருவமழை போதிய அளவு கிடைக்காமல், செப்., 30ல் நிறைவடைந்தது. இந்நிலையில் அக்., இரண்டாம் வாரத்தில் துவங்க வேண்டிய வடகிழக்கு பருவமழை கடந்த,

28ல் துவங்கியது. துவங்கிய நாள் முதல் தமிழகத்தில் நல்ல மழைபொழிவு இருந்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் கடந்த, 30ம் தேதி முதல் சாரல் மழையாக துவங்கிய வடகிழக்கு பருவமழை, நேற்று முன் தினம் இரவு கனமழையாக மாறியது. நேற்று காலை 6:00 மணிக்கு கனமழை கொட்டத் துவங்கியது. கோவை நகரின் பல்வேறு பகுதிகளில், கனமழை கொட்டித்தீர்த்ததால், அனைத்து பகுதிகளிலும், மழைநீர் வெள்ளமாக ஓடியது. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

கோவை லங்கா கார்னர் பகுதியில் மழைநீர் தேங்கியதால், இருசக்கர வாகன ஓட்டிகள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. வாகனங்களை தள்ளிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இருசக்கர வாகனங்கள் தவிர கார், ஜீப் உள்ளிட்ட வாகனங்களும் நீரில் நீந்திச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதேபோல், ரயில்வே ஸ்டேஷன், கலெக்டர் அலுவலகம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில்

**மழைநீர், கரைபுரண்டு ஓடியது.**

ரயில்வே ஸ்டேஷன் முன் மழைநீர் தேங்கியதால், பொதுமக்கள் ரோட்டில் நடப்பதில் சிரமம் ஏற்பட்டது. இதுதவிர, காந்திபுரம், ஆர்.எஸ்.புரம், சாய்பாபா காலனி, புரூக்பாண்ட் ரோடு, திருச்சி ரோடு, ஆவாரம்பாளையம் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுதவிர மழையால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில் சிக்கி வாகனங்கள் பலமணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

டவுன்ஹால் பகுதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலால், உக்கடம், ஆத்துப்பாலம் செல்லும் வாகனங்கள் வாலாங்குளம் பை-பாஸ் வழியாக சென்றன. இதனால், உக்கடம் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல்

ஏற்பட்டது. சிறுவாணி அணையின், 15.1 மீட்டர் உயரத்தில், நேற்றைய நிலவரப்படி, 9.19 மீட்டர் நீர்மட்டம் இருந்தது. குடிநீர் தேவைக்காக, 8.2 கோடி லிட்டர் வெளியேற்றப்பட்டது. அணைப்பகுதியில் 9 மி.மீ., மழையளவும், அடிவாரத்தில் 5 மி.மீ., மழையளவும் பதிவானது. கோவையின் மேற்கு தொடர்ச்சி மழைப் பகுதியில் சாரல் மழை மட்டுமே இருந்ததால், நொய்யல் ஆற்றுக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்தது.

கோவை மாவட்டத்தில் மழையளவு விபரம் (மி.மீ.,ல்): அன்னூர் - 2 , பீளமேடு - 7,

மேட்டுப்பாளையம் - 2.3, பொள்ளாச்சி - 30, பெரியநாயக்கன்பாளையம் - 2, சூலுார் - 11, வேளாண் பல்கலை - 1.4, சின்னகல்லாறு - 8, வால்பாறை பி.ஏ.பி., - 2.4, கோவை தெற்கு - 4.

## கொடைக்கானலில் விடிய விடிய மழை சூறாவளி காற்று; மின்தடையால் அவதி

கொடைக்கானல்:கொடைக்கானலில் விடிய விடிய பெய்த மழையால் வெள்ளி நீர் வீழ்ச்சியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. மலைப்பகுதி முழுவதும் மின்தடை ஏற்பட்டது. ஏரியில் படகு சவாரி நிறுத்தப்பட்டது.

கொடைக்கானலில் கடந்த இரண்டு நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் பலத்த காற்றுடன் துவங்கிய மழை விடிய, விடிய பெய்தது. இதனால் மலைப்பகுதியில் 20 க்கும் மேற்பட்ட முறை மின்தடை ஏற்பட்டு, இருளில் மூழ்கியது. ரோடுகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளி நீர் வீழ்ச்சியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது.பல இடங்களில் மரத்தின் கிளைகள் ஒடிந்து விழுந்தன.

சாலைகளில் உள்ள பள்ளங்களில் நீர் தேங்கியதால், வாகன ஓட்டிகள் கடும் அவதியுற்றனர். சுற்றி பார்க்க முடியாமல் சுற்றுலா பயணிகள் அவதிப்பட்டனர். கொடைக்கானல் நீர்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.மேல்மலை கிராமங்களில் பெய்த கனமழையால் முற்றிலும் மின்தடை ஏற்பட்டது. நட்சத்திர ஏரியை மேகமூட்டங்கள் முற்றிலும் மறைத்ததால் படகு சவாரி அவ்வப்போது நிறுத்தப்பட்டது. கொடைக்கானல் நீர்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

### சோத்துப்பாறை அணை நீர்மட்டம் ஒரே நாளில் க0 அடி உயர்வு

பெரியகுளம்:சோத்துப்பாறை அணை நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்வதால், அணை நீர்மட்டம் ஒரே நாளில் 10 அடி உயர்ந்து, மொத்த உயரம் 123 அடியை கடந்தது. இன்று அணை நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியகுளத்திலிருந்து 8கிமீ., தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில்

சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 126 அடி.பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை மழை கொட்டியது. இதனால் சோத்துப்பாறை அணை ஒரே நாளில் 10 அடி உயர்ந்து, 123 அடியை கடந்தது. அணைக்கு விநாடிக்கு 128 கனஅடி நீர் வரத்து உள்ளது. மழையளவு 100 மி.மீ., அணை நீர்மட்டம் இன்று நிறையும் வாய்ப்பு உள்ளது. வராகநதியிலும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.கடந்தாண்டு அக்.,16ம் தேதி அணையின் நீர்மட்டம் முழுவதுமாக உயர்ந்து, மறுகால் பாய்ந்தது குறிப்பிடத்தக்கது.

### தொடர் மழையால் உயரும் அணைகளின் நீர்மட்டம்

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் நேற்று முன் தினம் பெய்த மழையால், அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக மதுரை சாத்தையாறு அணையில் 100மி.மீ., மழை பதிவானது.

சில நாட்களாக இம்மாவட்டங்களில் மாலையில் லேசான சாரலுடன், மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் ஓரளவிற்கு மழை பெய்கிறது.நேற்று முன் தினம் பெய்த மழையளவு(மி.மீ.,):

பெரியாறு அணை 178.அ, தேக்கடி158., கூடலூர் 21, சண்முகா நதி 18, உத்தமபாளையம் 275, வீரபாண்டி 50, வைகை 386., மஞ்சளாறு 17, மருதாநதி10, பேரணை கஅ.ச, குப்பணம்பட்டி 152 மதுரைநகர் 11, சாத்தையாறு , மேட்டுப்பட்டி 20, கள்ளந்திரி அ, சிட்டம்பட்டி கஅ.ந, புலிப்பட்டி 5.4, மேலூர் 32, தனியாமங்கலம் 45, இடையபட்டி 88 விரகனுார் 112, கொடைக்கானல்3என்ற அளவில் மழை பதிவானது.அணைகளுக்கு நீர் வரத்து: பெரியாறு அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 4858, கன அடியாக உள்ளது. வெளியேற்றம் 517 அடி. வைகை வரத்து 735 வெளியேற்றம்585சோத்துப்பாறை வரத்து 128வெளியேற்றம் 3. மஞ்சளாறு வரத்து 172வெளியேற்றம்172மருதாநதி வரத்து 40 வெளியேற்றம் 40 சாத்தையாறு, சண்முகாநதி வரத்து, வெளியேற்றம் இல்லை.

**வராக நதியில் வெள்ளப்பெருக்குஒருநாள் இரவில் 100 மி.மீ, மழை:தேனி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

தேனி;வடகிழக்கு பருவமழையால் பெரியகுளத்தில் ஒரே நாள் இரவில் 100 மில்லி மீட்டர் மழை பதிவானது. வராக நதியில் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டுள்ளது.தேனி மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவில் பெய்ய துவங்கிய மழை தொடர்ந்து விடியும் வரை பெய்தது.

கொடைக்கானல் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கன மழை பெய்து வருவதால் சோத்துப்பாறை அணை பகுதியில் ஒரே நாள் இரவில் 100 மி.மீ., மழை பதிவானது. அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததால் நேற்று முன்தினம் 113 அடி உயரம் இருந்த அணையின் நீர் மட்ட உயரம் ஒரே நாளில் 10 அடி உயர்ந்து தற்போது 123 அடியை எட்டியுள்ளது. (அணையின் உயரம் 126.28) பெரியகுளத்தை சுற்றி மழைபொழிவு அதிகம் இருப்பதால் வராகநிதியில் அதிகாலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆற்றின் இருகரைகளையும் தொட்டு தண்ணீர் சென்றது.

மழைப்பொழிவு விபரம்: தேனி மாவட்டத்தில் நேற்று ஆண்டிபட்டியில் - 37.2 மி.மீ, அரண்மனைப்புதூர்-74, போடி-18.6, கூடலூர்-21, மஞ்சளாறு -17, பெரியகுளம்- 40, பெரியாறு-17.8, சோத்துப்பாறை-100, தேக்கடி-15.8, உத்தமபாளையம்-27.5, வைகை அணை-38.6, வீரபாண்டி -50 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் நேற்று ஒரு நாளில் 458.30 மி.மீ., மழை பதிவானது.

அணைகளின் நீர் மட்டம்: வைகை அணை- 46.88 நீர் மட்டம் அடியாக உள்ளது.( வைகை அணை உயரம் 71அடி). வினாடிக்கு 275 கன அடி நீர்வரத்து உள்ளது. 460கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பெரியாறு அணையில் 122.80 அடியாக உயர்ந்தது. வினாடிக்கு 4,868 கனஅடி நீர் வரத்து உள்ளது. வினாடிக்கு 511 கன அடிநீர் வெளியேற்றப்படுகிறது. பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியான கேரளாவிலும் மேற்கு தொடர்ச்சி மலை சிவகிரி பகுதிகளில் நல்ல மழை பெய்ததால் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஒரே நாளில் மூன்று அடியை எட்டியுள்ளது.

மஞ்சளாறு அணை முழுகொள்ளவை ஒரிரு நாளில் எட்ட உள்ளது. தற்போது அணையின் நீர் மட்டம் 56.80 அடியாக (முழு உயரம் 57அடி) உள்ளது. நேற்று காலை முதல் தேனி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விருதுநகரில் கொட்டித்தீர்த்தது மழை:வீடுகளை சூழ்ந்தது வெள்ளம்**

விருதுநகர்;நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால் விருதுநகர் புறநகர் பகுதிகள், தளவா#புரம் எம்.ஆர். நகரில் வெள்ளம் வீடுகளை சூழ்ந்தது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

விருதுநகரில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் காலை 8 மணி வரை மழை பெய்தது. இதனால் வரத்து கால்வாய்களில் மழை வெள்ளம் ஓடியது.

புறநகர் பகுதிகளான லட்சுமிநகர், நேதாஜி நகர் மற்றும் பழைய பஸ் ஸ்டாண்ட் பகுதி, முத்துராமன்பட்டி உட்பட பல இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதி வீடுளுக்குள் தண்ணீர் புகுந்தது. வீடுகளை சூழ்ந்ததுலட்சுமிநகர் மெயின் ரோட்டில் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் சூழ்ந்தது. இதனால் அப்பகுதியினர் வீடுகளை விட்டு வெளியில் வரவே சிரமமப்பட்டனர். நேதாஜி நகருக்கு செல்லும் பாதையில் ஒரு அடி உயரத்திற்கு தண்ணீர் நின்றது. முத்துராமன்பட்டி ரயில்வே பாலத்தின் கீழ் பகுதியில் மழைநீர் தேங்கியதால் மக்கள் அவதிப்பட்டனர்.

நேதாஜிநகர் முருகேசன்,"" மழைபெய்யும் போதெல்லாம் இப்பகுதியில் மழைநீர் தேங்குகிறது. இது குறித்து சத்திரரெட்டியபட்டி ஊராட்சி

நிர்வாகத்திடம் பல முறை முறையிட்டும் நடவடிக்கை இல்லை. வீட்டை விட்டு வெளியில் வரவே முடியாத நிலை ஏற்படுகிறது,"என்றார்.

அருணாச்சலம்,"" நான்கு வழிச்சாலையில் கால்வாயில் செடிகள் முளைத்து மழைநீர் செல்ல முடியாமல் அடைப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தண்ணீர் செல்லும் பாதையை இப்பகுதியினரே பணம் செலவழித்து சுத்தம் செய்தோம். தற்போது மீண்டும் செடிகள் அடைத்துள்ளதால் தண்ணீர் செல்ல முடியவில்லை. இதனால் நீர் தேங்கி கொசு உற்பத்தியாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. கால்வாயை சுத்தம் செய்ய வேண்டும்," என்றார்.

தளவாய்புரம்: தளவாய்புரம் ஊராட்சி 6வது வார்டில் விரிவாக்கப்பட்ட எம்.ஆர்., நகரில் ரோடு,மின்சாரம் மற்றும் வாறுகால் வசதிகள் செய்து தரப்படவில்லை. சில நாட்களாக பெய்துவரும் மழையால் வீடுகளை தண்ணீர் சூழந்துள்ளது. இதைக்கடந்துதான் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் நடந்து செல்ல வேண்டும். ஊராட்சி நிர்வாகத்திடம் மக்கள் பல முறை புகார் கூறியும் நடவடிக்கையில்லை.

மீனா: எங்கள் பகுதியில் 40 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. மழை நீர் வீட்டை சூழ்ந்துள்ளது. முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று பொருட்கள் வாங்க செல்ல வேண்டியுள்ளது. தண்ணீர் செல்லும் கால்வாயை அடைத்து விட்டார்கள்.

முருகேசன்: சரியான மின்சார வசதி, ரோடு வசதி இல்லாததால் இரவில் வீடுகளுக்கு செல்ல மிகுந்த சிரமம் அடைகிறோம். இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்தினர், கவுன்சிலரிடம் எடுத்து கூறியும் நடவடிக்கையும் இல்லை.

ராஜேஸ்வரி(ஊராட்சித்தலைவர்): மழை நீர் செல்லும் கால்வாய் மேல்பகுதியில் செட்டியார்பட்டி பேரூராட்சியினர் கழிப்பறைக்கான சுவர்

கட்டியுள்ளனர்.இதனால் குறிப்பிட்ட அளவிற்கு மேல் தண்ணீர் செல்ல முடியாது.பாலம் அமைக்கும் பணி முடிந்தவுடன் தண்ணீர் செல்லும் பாதை சீர் செய்யப்படும். விவசாய நிலமாக இருந்து தற்போது வீடுகளாக மாறியதால் இந்த பிரச்சனை உள்ளது. விரைவில் சீர் செய்யப்படும்.

பிளவக்கல்லில் 70 மி.மீ., மழை:மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு (மி.மீ.,): அருப்புக்கோட்டை 46, சாத்தூர் 54, ஸ்ரீவில்லிபுத்தூர் 27, சிவகாசி 24, விருதுநகர் 29 , திருச்சுழி 44, ராஜபாளையம் 3, காரியாபட்டி 25.40, வத்திராயிருப்பு 4, பிளவக்கல் 70, வெம்பக்கோட்டை 10.50, கோவிலாங்குளம் 46.50

## இந்தாண்டு வடகிழக்கு பருவமழைகைகொடுக்கும் நம்பிக்கையில் காத்திருக்கும் விவசாயிகள்

காரியாபட்டி:மாவட்டத்தில் கடந்த சில ஆண்டாக வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யாததால் விவசாய பரப்பு குறைந்து விளைநிலங்கள் தரிசாகி விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்தாண்டாவது தேவையான அளவு மழை பெய்து தங்களுக்கு கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் காத்திருக்கின்றனர்.

மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழில். கடந்த 20 ஆண்டுகளாக சரிவர மழை பெய்யவில்லை. இருந்தாலும் மழையை நம்பி விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால் பருவம் தவறி பெய்யும் மழை, போதிய அளவு இல்லாதது ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புற மக்கள் விவசாயத்தை நம்பி குடும்பம் நடத்துபவர்கள்.

நம்பிக்கை

விவசாயம் என்றைக்காவது கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் வங்கியில் நகையை அடமானம் வைத்து அதனை செய்துவருகின்றனர். வடமாநிலங்களில் மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வருகிறது. ஆனால் அந்த நிலைமை இங்கில்லாமல் இயற்கை ஏமாற்றி விடுகிறது.

இதனிடையே இந்தாண்டு ஒருசிலவாரம் காலதாமதம் ஆனாலும் வடகிழக்கு பருவமழை சமீபத்தில் துவங்கி உள்ளது. கடந்தகாலங்களைப்போல இல்லாமல் இந்த மழை தங்கள் விவசாயத்திற்கு நிச்சயம் கைகொடுக்கும் என விவசாயிகள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர். அதற்கேற்ப விவசாயப்பணிகளை கடந்த சில மாதங்களுக்கு முன்னரே துவங்கிவிட்டனர். காரியாபட்டி செல்வராஜ், ""ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் எள், சோளம், பருத்தி, துவரை உள்ளிட்ட பயிர்கள் பயிரிட்டு வருகிறோம்.

ஆரம்பத்தில் பெய்யும் மழை பின் பருவ மாற்றங்களால் பொய்க்கிறது. இதனால் விவசாயத்தால் நஷ்டம்தான் ஏற்படுகிறது. வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியவில்லை. இந்தாண்டு வடகிழக்கு பருவமழை இப்போதுதான் பெய்யத்துவங்கியுள்ளது. இது தொடர்ந்து பெய்து விவசாயத்திற்கு கைகொடுக்கும் என நம்புகிறோம்,"என்றார்.

**மாவட்டத்தில் போதிய மழையில்லை நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது**



கடலூார்: கடலூார் மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் பெய்ய வேண்டிய மழையளவை விட குறைந்ததால் நிலத்தடி நீர்மட்டம் 10 அடிக்கும் மேல் குறைந்துள்ளது.

தமிழகத்தில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை மூலம் நமக்கு மழை கிடைத்து வருகிறது. பொதுவாக கடலோர மாவட்டமான கடலூரில் கூடுதலான மழை பெய்யும். இந்த ஆண்டு. கடந்த 10 ஆண்டு சராசரி மழையளவை விட மழை குறைந்துள்ளது.கடந்த 28ம் தேதி முதல் பருவக்காற்று திரும்பியும் அவ்வளவான மழையில்லை.

செப்டம்பர் மாதத்தில் பெய்ய வேண்டிய சராசரியான மழையளவு 113.36 மி.மீ., அதில் இதுவரை 65.59 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. அதேப்போல கடந்த மாதம் அக்டோபரில் 277.7 மி.மீ.,க்கும் மேல் பெய்ய வேண்டிய மழையளவில் 114.71 மி.மீ., பெய்துள்ளது.

எனவே, கடந்த 2 மாதங்களில் பெய்ய வேண்டிய மழையளவில், இதுவரை 40 சதவீதம் தான் பெய்துள்ளது. இதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றுள்ளது.

ஆற்றுப்படுகை, நீர்நிலைகளில் ஒட்டியுள்ள கிராமங்களில் குடிநீர் பிரச்னை இல்லையென்றாலும் நீர்நிலைகள் இல்லாத பகுதிகளில் குடிநீருக்காக பயன்படுத்தப்படும் போர்வெல்களில் நீர் மட்டம் குறைந்துவிட்டதால் நீர்மூழ்கி மோட்டார்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சேடப்பாளையம், தொண்டமாநத்தம் போன்ற கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் 10 அடிக்கு மேல் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. வரும் காலங்களில் குடிநீருக்காக கிராம மக்கள் அல்லாடும் அபாயம் உள்ளது.

### புதுச்சேரியில் பருவ மழை துவங்கியதால் மரக்கன்றுகள் நட நடவடிக்கை தேவை

தமிழகம்-புதுச்சேரியில் பருவ மழை பொழிய தொடங்கி விட்டது. இந்த மழை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்பதை பயன்படுத்தி சாலையோரம், வீட்டு தோட்டம், தரிசு நிலங்களில் மரக் கன்றுகள் நட சரியான பருவம் இது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த நாம், நம்முடைய சுய நலத்திற்காக மரங்களை வெட்டி இயற்கையை பாழ்படுத்தி விட்டு, கோடை கால வெப்பத்தை கொடுமையாக அனுபவிக்கும் போது 'என்ன வெயில் இப்படி கொதிக்கிறது என அவஸ்தையில் முனகுவது எந்த விதத்தில் நியாயமாகும்'.

வரும் ஆண்டுகளில் இனி வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என வானிலை அறிவிப்புகள் ஒரு புறம் வயிற்றில் புளியை கரைக்கிறது. ஆக்சிஜனை அளவில்லாமல் சுவாசித்து நீண்ட ஆயுளோடு வாழ்ந்த நமது முன்னோர்கள் நம்மையும் அது போல் வாழ, வழிகாட்டி சென்ற இயற்கை வாழ்வியல் முறைகளை தவற விட்டு, விட்டு கார்பன் டை ஆக்சைடை கட்டிக் கொண்டு தவிப்பது ஏனென்று புரியவில்லை.

உலகத்தில் எல்லாவற்றையும் உருவாக்கி கொள்ளலாம், ஆனால் மனிதனின் உயிர் நாடியாக விளங்கும் தண்ணீரை (திரவ தங்கம், அதுக்கும் மேல) எங்கிருந்து பெற முடியும்.

அதுக்கு தேவையான மரங்களை நாம் நடவேண்டாமா. முன்பெல்லாம் மழைக் காலம் ஒன்று இருந்தது.

இப்போது மழை நாட்கள் மட்டுமே நம் மனத்தில் தொக்கி நிற்கிறது. நாம் அனுபவித்த வெப்ப வேதனைகளை நமது வருங்கால சந்ததிகளும் சந்திக்க வேண்டுமா?.நம்மை தொடரும் இந்த வெப்ப சங்கிலியை அறுத்தெறிய, கிராம மற்றும் நகரத்தில் வாழ்பவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு இடத்தில், இந்த மழைக் காலத்தை பயன்படுத்தி சாலையோரம், வீட்டு தோட்டம், தரிசு நிலங்களில் மரக் கன்றை நட இன்றே தொடங்குகள்.

மரவளர்ப்பை ஊக்குவிக்கும் விதமாக அரசு சார்பில் வேளாண் மையங்கள் அல்லது வனத்துறை அலுவலங்களில் இலவசம் அல்லது மானிய விலையில் பொது மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. அதனை நீங்கள் பயன்படுத்தி கொள்ளலாம். இப்போது மரக்கன்றை நட செய்ய கூறும் காரணம் நீங்கள் தண்ணீர் விட தேவையில்லை என்பதே.மர வளர்ப்பை உங்கள் வீட்டு குழந்தைகளின் மனதிலும் விதையுங்கள், அவர்கள் அதை மண்ணில் விதைப்பார்கள். ஆதலால் மழை வருது வாங்க மரம் நடலாம்.

## விவசாய மின் இணைப்பு பதிவு கால நீட்டிப்புக்கு அழைப்பு

விழுப்புரம்: விவசாய மின் இணைப்பிற்கு காலக்கெடு முடிவதால், கால நீட்டிப்புக்கு விவசாயிகள் தயார்நிலை பதிவு செய்யலாம்.

இது குறித்து விழுப்புரம் மேற்பார்வை பொறியாளர் ஸ்ரீநிவாசன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: விழுப்புரம் மின்

பகிர்மான வட்டத்தில், விழுப்புரம் கோட்டம், கண்டமங்கலம் கோட்டம், செஞ்சி கோட்டம், திண்டிவனம் கோட்டம் இயங்கி வருகிறது. இந்த கோட்டங்களில் விவசாய மின் இணைப்பு வேண்டி 31.3.2000 வரை பதிவு செய்த அனைத்து விவசாய விண்ணப்பங்களுக்கும், கடந்த 2010ம் ஆண்டு இறுதியில் தயார் நிலை பதிவு செய்ய நோட்டீஸ் வழங்கப்பட்டது.தற்போது அந்த நோட்டீஸ் காலக்கெடு, வரும் 5ம் தேதி முடியும் வருவாயில் உள்ளது. எனவே, இத்தகவலை பார்த்தவுடன் விண்ணப்பம் ரத்து செய்வதை தவிர்க்கும் பொருட்டு, இதுவரை தயார்நிலை பதிவு செய்யாத அனைத்து விவசாயிகளும், சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகி உரிய விண்ணப்பம் பெற்று கொள்ளலாம். மேலும், வருவாய் ஆவணங்கள் அளித்து கால நீட்டிப்பு பெற்று தயார்நிலை பதிவு செய்யலாம்.

## கோமுகி அணையில் 4ம் தேதி பாசனத்திற்காக நீர் திறக்க முடிவு

கச்சிராயபாளையம்: கோமுகி அணையிலிருந்து வரும் 4 ம் தேதி பாசனத்திற்காக நீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணையின் மூலம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர், விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆண்டுதோறும் வழக்கமாக அக்டோபர் மாத துவக்கத்தில் சம்பா சாகுபடிக்கு நீர் திறக்கப்படும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கச்சிராயபாளையம் மற்றும் கல்வராயன் மலையில் பெய்த மழையின் காரணமாக அணையின் நீர் மட்டம் முழு கொள்ளவை எட்டியது. சம்பா சாகுபடி பருவம் துவங்கிய நிலையில் கோமுகி அணை பாசன விசாயிகள் நாற்றாங்கால் அமைத்து உழவு பணிக்காக அணையின் நீரினை எதிர் நோக்கி காத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து சம்பா சாகுபடிக்காக அணையிலிருந்து வரும் 4 ம் தேதி பழைய மற்றும் புதிய பாசன கால்வாய்கள் வழியாக நீர் திறக்க பொதுபணிதுறையினர் முடிவு செய்துள்ளனர். இதனால் விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

**சேலம் மாவட்டத்தில் பகலில் கொட்டிய பருவமழை: கரூர், சென்னிமலையில் சேதம்**

சேலம்: தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கிய நிலையில், சேலம் மாவட்டத்தில், நேற்று பகல் முழுவதும், விட்டுவிட்டு மழை பெய்தது. அதில், அதிகபட்சமாக, சங்ககிரி, 26 மி.மீ., இடைப்பாடி, 4.4, ஓமலூர், 1.4, சேலம் மாநகர், 0.4, மேட்டூர், 0.2 மி.மீ., மழை பதிவானது.

ஈரோடு மாவட்டத்தில், நேற்று முன்தினம் முதல் பரவலாக கன மழை கொட்டியது. அதிகபட்சமாக, சென்னிமலை, 122 மி.மீ., பவானி, 7.2, சத்தியமங்கலம், 10.8, கொடிவேரி, 15, கோபி, 19.2, எலந்தகுட்டைமேடு, 24, கவுந்தப்பாடி, 15, ஒரத்துப்பாளையம், 107, பெருந்துறை, 57, பவானி, 28.4, ஓலப்பாளையம், 53, புங்கம்பாடி, 56.4, ஈரோடு, 40, மொடக்குறிச்சி, 24, அரச்சலூர், 45, காங்கேயம், 58.4, கொடுமுடி, 1.4 மி.மீ., தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மழை கொட்டியது. தொடர்ந்து, நேற்றும், பகல் நேரங்களில் விட்டுவிட்டு மழை பதிவானது. ஈரோடு - சென்னிமலை ரோட்டில் உள்ள பழைய கூட்ஸ் ஷெட் அலுவலகத்தின் முன்புள்ள, 30 அடி நீள காம்பவுன்ட் சுவர் இடிந்து விழுந்தது. அங்கிருந்த மரமும் விழுந்தது. கரூர் மாவட்டத்தில், நேற்று காலை, 8.45 மணிக்கு, கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. அப்போது, கரூரில் பல இடங்களில் மரங்கள் விழுந்தது. மேலும், வெங்கமேடு ரோட்டில் உள்ள துப்புரவு பணியாளர்கள், 20க்கும் மேற்பட்டவர்களின் வீடுகளில் இருந்த ஓடுகள் காற்றில் பறந்தது. இதனால், வீட்டில் இருந்த துப்புரவு பணியாளர்கள், அவர்களது

குடும்பத்தினர் வெளியே ஓடினர். வீட்டில் இருந்த பெரும்பாலான பொருட்களும் சேதம் அடைந்தது. அப்போது, வீட்டில் இருந்த முத்தம்மாள், 60, ஹரிணி, 12 ஆகிய இருவரும் காயம் அடைந்தனர். நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில், நேற்று, பகல் நேரங்களில் பரவலாக மழை பெய்தது. இதனால், அந்தந்த பகுதியில் உள்ள நீராதாரங்கள் மற்றும் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

### மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிப்பு

மேட்டூர்: நீர்வரத்து அதிகரித்ததால், நேற்று ஒரே நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு அரை டி.எம்.சி.,யும் அதிகரித்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தீவிரம் அடைந்த பருவ மழையால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 4,912 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 6,412 கன அடியாக அதிகரித்தது. டெல்டா மாவட்டங்களிலும் பருவமழை நீடிப்பதால், அணையில் இருந்து பாசனத்துக்கு வினாடிக்கு, 1,000 கன அடி நீர்மட்டுமே திறக்கப்படுகிறது. நேற்று முன்தினம், 61.890 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 62.450 அடியாக உயர்ந்து, ஒரே நாளில் நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. பருவமழை காரணமாக, கால்வாய் பாசன நீர் நேற்று நிறுத்தப்பட்டது.

### 12 கி.மீ. தூரத்துக்கு சாலையோர செடிகளை அகற்றும் பணி துவக்கம்

பவானிசாகர்: பவானிசாகரில் இருந்து புன்செய் புளியம்பட்டி வரை, 12 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலையின் இருபுறமும், முட்புதர், செடி, கொடி வளர்ந்து போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்தது. இந்நிலையில், இவற்றை அகற்றும் பணியில் சாலை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சத்தியமங்கலம் மண்டலத்துக்கு உட்பட்ட, சாலை பணியாளர் ஏழு பேர், தார்சாலையின் இருபுறமும் அமைந்துள்ள முட்புதர்,

செடி, கொடிகளை அகற்றி வருகின்றனர். பவானிசாகர் நால்ரோடு பகுதியில் துவங்கிய இந்தப் பணி, அண்ணா நகர், பணையம்பள்ளி, தாசம்பாளையம், கணக்கரசம்பாளையம் மற்றும் புன்செய் புளியம்பட்டி வரை, 12 கிலோ மீட்டர் தூரத்துக்கு நடக்கிறது.

## அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி பயிற்சி

ஈரோடு: ஈரோடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி பயிற்சி, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் சாத்தப்பன் தலைமை வகித்தார். அறுவடைக்குப்பின், நிலத்தை பண்படுத்துவதால், 30 சதவீத்துக்கு மேல் செலவு குறையும். கூடுதல் மகசூல் கிடைக்கும். மண் வளம் காக்கப்படும். மண்ணில் தண்ணீர் தேங்கும் சக்தி அதிகரிக்கும். உரம், விதைகளின் பயன்பாட்டை குறைக்கலாம், என யோசனை தெரிவிக்கப்பட்டது. தவிர, உழவர் நலத்திட்டங்கள், பொருளீட்டு கடன், குளிர் பதன கிடங்கு பயன்படுத்துதல், விவசாயிகள் குழுக்கள் அமைத்து, அக்குழுவை உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக மாற்றுதல் குறித்து விளக்கப்பட்டது.

## தெளிப்பு நீர் பாசனத்துக்கு அரசு மானியம் கிடைக்குமா?

அந்தியூர்: கிணற்றில் பம்புசெட், மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வாய்க்காலில் பாய்ச்சி வேளாண் சாகுபடியில் ஈடுபட்டு வந்த விவசாயிகள், சொட்டு நீர் பாசன முறைக்கு மாறினர். இப்போது ஸ்பிரிங்ளர் எனப்படும் தெளிப்பு நீர் முறையில் சாகுபடி செய்ய, அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இம்முறையில் பயிர்களின் மேல், தண்ணீர் விழுவதால், நன்கு வளர்வதுடன், ஒட்டி கொண்டிருக்கும் அசுவனி பூச்சிகளும் பயிரைத் தாக்க முடிவதில்லை. இம்முறையில் நெல், மஞ்சள், எள், மக்காச்சோளம், வெங்காயம் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால் கரும்பு, வாழை போன்ற பயிர்கள் உயரமாக

வளரக் கூடியதாக உள்ளதால் இம்முறையில் சாகுபடி செய்ய முடிவதில்லை. எனவே சொட்டுநீர் பாசனத்துக்கு, அரசு மானியம் தருவதுபோல், தெளிப்பு நீர் பாசனத்திற்கும் மானியம் வழங்க விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## இயற்கை முறையிலான குளம் கோடையிலும் குறையாத நீர்வளம்

பந்தலூர்: ' நீலகிரியில் இயற்கை முறையில் தண்ணீரை தேக்கும் குளங்களை ஏற்படுத்தினால் தண்ணீர் வளம் அதிகரிக்கும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் பல பகுதிகளிலும், மழை காலங்களில் வழிந்தோடும் நீரை தேக்கி வைக்கும் வகையில், எச்.ஏ.டி.பி. மூலம் பல்வேறு வகையிலான தடுப்பணைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

கற்கள், கம்பி வளைகளை கொண்டு அமைக்கப்படும் தடுப்பணைகளில் மழை காலங்களில் மட்டுமே தண்ணீர் சேமிக்க இயலும் என்பதுடன், அவையும் உடைவதால் கோடை காலங்களில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்படுகிறது. மறுபுறம், கற்கள் மற்றும் சிமெண்ட் மூலம் அமைக்கப்படும் தடுப்பணைகள் நீலகிரியின் இயற்கை தன்மைக்கு புறம்பாகவும் அமைகிறது. இந்நிலையில், பந்தலூர் அருகே மாங்கோடு பகுதியில் இயற்கை தன்மை பாதிக்காத வகையில், குளம் அமைக்கும் பணியில், குமரன் என்ற விவசாயி ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

இவரது விவசாயத்தோட்டத்திற்கு தேவையான தண்ணீர் கோடை காலங்களில் கிடைக்காமல் அவதியடைந்து வந்தார். இதையடுத்து, தனது தோட்டத்தில் ஊற்று நீர் உற்பத்தியாகும் இரண்டு இடங்களை தேர்வு செய்து, அதில் சிறிய குழி ஏற்படுத்தி அதனை சுற்றிலும், 'ஓடை' எனப்படும் மூங்கிலை நடவு செய்துள்ளார்.

இதனால் மழை காலங்களில் மட்டுமின்றி கோடை காலத்திலும் தண்ணீரின் அளவு குறையாமல் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்கிறது. மேலும், இந்த மூங்கில் செடிகள், பறவைகளின்

வாழ்விடமாகவும்., பாம்பு, தவளை, எலி உள்ளிட்ட விலங்கினங்களின் வாழ்விடமாகவும் மாறியுள்ளது.

விவசாயி குமரன் கூறுகையில்,“மாவட்டத்தில் பல்வேறு முறையிலான தடுப்பணைகள் அமைத்து தண்ணீரை பெயரளவுக்கு சேமிப்பதற்கு பதில், இதுபோன்று, இயற்கை முறையில் தண்ணீரை தேக்கும் குளங்களை ஏற்படுத்தினால் தண்ணீர் வளம் அதிகரிக்கும்,” என்றார்.

எனவே, தோட்டக்கலை துறையினர் இப்பகுதியில் ஆய்வு செய்து, பிற விவசாயிகளும் இதே முறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### நீலகிரியில் இடியுடன் மழை சுற்றுலா மையங்கள் 'வெறிச்'

ஊட்டி: நீலகிரியில் மழை பரவலாக பெய்து வருவதால், சுற்றுலா மையங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில், ஊட்டி, குன்னுார், கோத்தகிரி, குந்தா பகுதிகளில் இடியுடன் கூடிய, பலத்த மழை பெய்கிறது. நேற்று முன்தினம், 16.41 மி.மீ., சராசரி மழை பதிவானது. கடந்த வாரம் ஆயுத பூஜை விடுமுறையில், ஊட்டியில் ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். மழையால் தற்போது காலநிலை மாறி, குளிர் வாட்டுவதால், சுற்றுலா பயணிகள் ஊர் திரும்ப துவங்கியுள்ளனர்.

### மாலை காய்கறி விவசாயம் அதிகரிப்பு

மஞ்சூர்: மஞ்சூர் அடுத்துள்ள தேவர்சோலை பகுதியை சுற்றி காத்தாடிமட்டம், பிக்கோள் சந்திப்பு, கீழ் கைக்காட்டி, கொடலட்டி உள்ளிட்ட பகுதிகளில், 750 ஏக்கர் பரப்பளவில், தேயிலை தோட்டம் உள்ளது. தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால், அப்பகுதியில்

உள்ள விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக, தேயிலை தோட்டம் நடுவே, மலை காய்கறி பயிரிட்டு வருகின்றனர். தோட்டம் நடுவே, 100 ஏக்கரில் உருளை கிழங்கு பயிரிட்டுள்ளது. இந்த பரப்பு அதிகரிக்கும் நிலை உள்ளது.

### பழநியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

பழநி;பழநியில் நேற்று பெய்த மழையால் ரோடுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

பழநி நகர மக்களை குளிர்விக்கும் வகையில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் மழையும், காலை 8 மணி வரை 24 மி.மி., மழை பதிவானது. பகலில் சாரல் மழைபெய்தது.

ஆர்.எப்.,ரோடு, பஸ் ஸ்டாண்ட் ரவுண்டானா, குளத்துரோடு, பூங்காரோடு, பழையதாராபுரம் சாலை, அடிவாரம் ரோடு, பஸ் ஸ்டாண்ட் தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்கி ஓடியதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். வரதமாநதி அணைப்பகுதி, சட்டப் பாறைப்பகுதி, பாலசமுத்திரம் உட்பட பலப்பகுதிகளில் மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

### ஒட்டன்சத்திரத்தில் வயல் ஆய்வு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் அம்மா திட்டத்தின் கீழ் வேலூர், சத்திரப்பட்டியில் மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர், விரிவாக்க பணியாளர்கள் இணைந்து வயல் ஆய்வு மேற்கொண்டு மக்காச்சோளத்தில் ஏற்படும் பூச்சி தாக்குதலை கட்டுபடுத்தும் முறைகள் பற்றி எடுத்துரைத்தனர். வேளாண் விரிவாக்க களப்பணியாளர்களும் உடன் இருந்தனர். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் அருணாசலம் தெரிவித்தார்.

## தாண்டிக்குடியில் 75.மி.மீ., மழை

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 75.மி.மீ., மழை கொட்டித் தீர்த்தது.நேற்று முன்தினம் வானம் மேகமூட்டத்துடன் சாரல் மழை பெய்தது. மாலை துவங்கிய மழை விடிய, விடிய பெய்தது. சூறைக்காற்று வீசுவதால் கொடைக்கானல்-பண்ணைக்காடு மின்பாதையில் மரங்கள் முறிந்து மின்சப்ளை பாதிப்பு ஏற்பட்டது. மருதாநதி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. தாண்டிக்குடி, தடியன்குடிசையில் 75.மி.மீ., மழை ஒரே நாள் இரவில் பதிவாகியுள்ளது.

## மஞ்சளார் அணை தண்ணீர்கண்மாய்களுக்கு திறப்பு

தேவதானப்பட்டி;நேற்று காலை முதல் மஞ்சளார் அணையில் இருந்து விநாடிக்கு ஆயிரம் கன அடிநீர் ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதனால் பத்துக்கும் மேற்பட்ட கண்மாய்கள் நிறைந்து வருகின்றன.தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணையின் உயரம் 57 அடியாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள மூலாறு, வரட்டாறு, மஞ்சளாறு, தலையாறு பகுதியில் பெய்யும் மழைநீர் அணைக்கு வந்து சேர்கிறது. அணையில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் புதிய பாசனம், பழைய பாசன பகுதிகளில் 5 ஆயிரத்து 200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியைப் பெற்று முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

நடப்பு ஆண்டு அக்டோபர் மாதத்தின் முன்பகுதியில் மேற்குதொடர்ச்சி மலையில் மழை பெய்தது. இதனால் அணையின் கொள்ளவு முழுமையாக நிறைந்தது. தற்போது அணையில் 56.80 அடி நீர் உள்ளது. நேற்று முன்தினம் வரை அணையில் இருந்து விநாடிக்கு 176 கனஅடிநீர் ஆற்றில் திறந்துவிடப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு விடிய, விடிய அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்தது. இதனால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை 8 மணிக்கு விநாடிக்கு ஆயிரம் கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையின் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து ஆயிரம் கன அடி நீர் ஆற்றில் வெளியேற்றப்பட்டது.

இதன் மூலம் செங்குளத்துப்பட்டி கண்மாய், கெங்குவார்பட்டி மத்துவார்குளம், பழைய வத்தலக்குண்டு பெரியகுளம்கண்மாய் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கண்◌ாமாய்களுக்கு நீர் சென்று கொண்டிருக்கிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**டெங்குவைத் தடுக்க நிலவேம்பு குடிநீரைப் பருகுவது அவசியம்: மாநகராட்சி ஆணையர் வலியுறுத்தல்**



டெங்கு ஏற்படுவதைத் தடுக்க நிலவேம்புக் குடிநீரை பொதுமக்கள் அவசியம் பருக வேண்டும் என சென்னை மாநகராட்சி ஆணையர் விக்ரம் கபூர் வலியுறுத்தினார்.

பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் "நமது சென்னை நமக்கே' என்ற நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையாளர் விக்ரம்கபூர் கலந்து கொண்டு டெங்கு விழிப்புணர்வு முகாமை தொடக்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு டெங்கு பற்றிய விழிப்புணர்வு பற்றியும் எடுத்துரைத்தார். அப்போது டெங்கு பரவுவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசின் சார்பில் நிலவேம்புக் குடிநீர் பொதுமக்களுக்கு விலையில்லாமல் வழங்குகிறது. அதை பொதுமக்கள் அவசியம் பருக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து திருவான்மியூரில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் உலகத் தரம் வாய்ந்த நடைபாதை அமைக்கும் பணியையும், மழைநீர் சேகரிப்பு தொட்டியையும் பார்வையிட்டார். அதையடுத்து அந்தப் பகுதியில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளியில் பொதுநல சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். அப்போது, மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்குவது பற்றியும், தரம் பிரித்து கொடுப்பதன் அவசியம் பற்றியும் பொதுமக்களிடம் விளக்கும்படி பொதுநலச்சங்க பிரதிநிதிகளிடம் விக்ரம் கபூர் வலியுறுத்தினார்.

## 3.5 லட்சம் டன் பருப்பு வகைகள் கையிருப்பு: மத்திய அரசு திட்டம்



பருப்பு வகைகளின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, நடப்பு ஆண்டில், 3.5 லட்சம் டன் பருப்பு வகைகளை கையிருப்பில் வைத்துக்கொள்ள, மத்திய வேளாண் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் பரவலாக பருவமழை பொய்த்ததன் காரணமாக, 2013-14ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, கடந்த நிதியாண்டில் (2014-15) துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளின் விளைச்சல் 20 லட்சம் டன் அளவுக்கு குறைந்தது. இதன் விளைவாக, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு உள்ளிட்டவற்றின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், பருப்பு வகைகளின் விலை மேற்கொண்டும் அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில், நடப்பு ஆண்டில் மொத்தம் 3.5 லட்சம் டன் பருப்பு வகைகளை இருப்பில் வைக்க மத்திய வேளாண் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாவது:

இந்திய உணவுக் கழகம், வேளாண் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலமும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் வாயிலாகவும் 3.5 லட்சம் டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1.5 லட்சம் டன் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பும், 2 லட்சம் டன் கடலைப் பருப்பு மற்றும் பாசிப் பருப்பும் அடங்கும்.

விவசாயிகள் மத்தியில், பருப்பு வகைகளைப் பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையிலும், இவற்றின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், பருப்பு வகைகளை விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வர்த்தக அமைச்சகம், உணவுத் துறை அமைச்சகம் உள்ளிட்டவற்றின் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

1 கோடி டன் இறக்குமதி: இதனிடையே, உள்நாட்டுத் தேவையை சமாளிக்க, கடந்த ஆண்டு, 44 லட்சம் டன் பருப்பு வகைகளை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இந்த நிலையில், நடப்பு ஆண்டில் பருவமழை வழக்கத்தைவிட குறைவாகப் பெய்யும்பட்சத்தில், பருப்பு வகைகளின் உற்பத்தி கடந்த ஆண்டைவிட மேலும் குறையும் அபாயம் உள்ளது. அப்படியொரு நிலை ஏற்பட்டால், பருப்பு வகைகளின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, நடப்பு நிதியாண்டில் 1 கோடி டன் அளவுக்கு பருப்பு வகைகளை இறக்குமதி செய்யும் நிலை ஏற்படும் என்று இந்திய வர்த்தக-தொழில் கூட்டமைப்பின் (அசோசேம்) ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை முதல் அடுமனை பயிற்சி முகாம்

வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் அடுமனை பயிற்சி முகாம் திங்கள்கிழமை (நவ.2) முதல் நடக்கவுள்ளது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 4 வாரங்களுக்கு அடுமனை பயிற்சி முகாம் மற்றும் ஓராண்டு அடுமனை தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி வகுப்புகள் நடக்கவிருக்கின்றன. நவ.2-ஆம் தேதி தொடங்கும் அடுமனை பயிற்சி முகாமில் பங்கேற்போர் பல்கலைக்கழகத்துக்கு நேரில் வரலாம். இந்தப் பயிற்சியின்போது பிரெட், பன், பப்ஸ், கேக்குகள், பிஸ்கெட்டுகள், ரோல்ஸ் தயாரிக்க கற்றுத் தரப்படும்.

அடுமனை பட்டயப் பயிற்சியில் அடுமனை தொழில்நுட்பம் குறித்த முழு தகவல்களும் பகிரப்படும். பட்டயப் பயிற்சியில் சேர்ந்து பயில குறைந்தது 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அடுமனை பயிற்சி முகாம் மற்றும் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை ஒருங்கிணைப்பாளர், அடுமனை பயிற்சிப்

பிரிவு, வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம், ஹெப்பாள், பெங்களூரு-24 என்ற முகவரியில் ரூ.10 செலுத்தி ஒப்படைக்கலாம். மேலும் விவரங்களுக்கு 080- 23513370 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**குளிரை சமாளிக்கதில்லி உயிரியல் பூங்காவில் சிறப்பு ஏற்பாடுகள்**

குளிர் காலம் நெருங்குவதையொட்டி, தில்லி உயிரியல் பூங்காவில் விலங்குகளுக்காக பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பூங்கா மேற்பார்வையாளர் ரியாஸ் கான் கூறியதாவது: ஒவ்வொரு பருவ காலத்துக்கும் ஏற்ப விலங்குகளுக்கு சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறோம். தற்போது குளிர் காலம் நெருங்குவதையொட்டி, பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

குளிரைச் சமாளிக்க விலங்குகள் தங்குமிடங்களில் ஹீட்டர்கள், மின்விளக்குகள், வைக்கோல் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விலங்குகள் கதகதப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும். குளிர்காலத்தை முன்னிட்டு, விலங்குகளுக்கான உணவு முறைகளும் மாற்றப்பட உள்ளன. அதன்படி, விலங்குகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் உணவின் அளவை அதிகரிப்பதுடன், வெல்லம், நெல்லிக்காய் ஆகியவையும் உணவில் கூடுதலாக சேர்க்கப்படும்.

தாவர உண்ணிகளுக்கு தினமும் கூடுதலாக 50 கிராம் நெல்லிக்காயும், குளிர் பருவத்தில் கிடைக்கும் பழங்களும் வழங்கப்படும். ஊண் உண்ணிகளுக்கு கூடுதலாக 1 முதல் 2 கிலோ மாமிசமும், காண்டாமிருகங்களுக்கு வெல்லம், தானிய வகைகளும் அளிக்கப்படும்.

சிம்பன்ஸிகளுக்கு உணவு முறையில் பெரிய மாற்றம் எதுவும் தேவையில்லை. குளிரை சமாளித்துக் கொள்ள அவற்றுக்கு போர்வைகள்

வழங்கப்படும். பறவைகளை குளிர் காற்று தாக்காத வண்ணம் தடுக்க, அவற்றின் கூண்டுகள் அட்டைகளால் மறைக்கப்படும்.

மேலும், விலங்குகளின் தங்குமிடங்களின் வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸ்்க்கு கீழ் குறைந்துவிடாமல் தொடர்ந்து கண்காணிக்கப்படும். குளிர் காலத்தையொட்டி, இமயமலை பகுதிகளில் இருந்தும், சைபீரியா, யுரேசியாவில் இருந்தும் ஏராளமான பறவை இனங்கள் தில்லி உயிரியல் பூங்காவுக்கு வரும் என்றார் ரியாஸ் கான்.

### குறைந்த விலையில் துவரம் பருப்பு: முதல் நாளில் 15 டன் விற்பனை




குறைந்த விலையில் துவரம் பருப்பு விற்பனை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. முதல் நாளில் 15 டன் பருப்பு விற்பனை ஆனது. நாடு முழுவதும் ஒரு கிலோ துவரம் பருப்பின் விலை ரூ.220 வரையில் உயர்ந்தது. இதைக் கட்டுப்படுத்தும் வகையில் வெளிநாட்டில் இருந்து 5 ஆயிரம் டன் துவரையை மத்திய அரசு இறக்குமதி செய்தது. இதில், தமிழக அரசு 500 டன் பெற்றது. இதை பருப்பாக உடைத்து, ஒரு கிலோ, அரை கிலோ

பாக்கெட்டுகளாக்கும் பணி கடந்த சில நாள்களாக நடைபெற்றது. இதையடுத்து, ஒரு கிலோ ரூ.110-க்கு விற்பனை செய்யப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய 4 மாநகரங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறை ஆகியவைகளால் நடத்தப்படும் பல்பொருள் அங்காடிகள் உள்பட 91 கடைகளில் துவரம் பருப்பு விற்பனை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

இதில், சென்னை திருவல்லிக்கேணி, அசோக் நகர், கோடம்பாக்கம் ஆற்காடு சாலை உள்ளிட்ட இடங்களில் உள்ள அங்காடிகளில் பொதுமக்கள் குவிந்தனர்.

நீண்ட வரிசையில் நின்று ஒவ்வொருவரும் தலா 1 கிலோ துவரம் பருப்பை வாங்கிச் சென்றனர்.

இதில், அசோக் நகர் அங்காடிக்கு 750 கிலோ விற்பனைக்கு வந்திருந்தது. அதில், 12 மணிக்குள் 500 கிலோ வரையில் விற்பனையானது. அதேபோல், ஆற்காடு சாலை அங்காடியில் 500 கிலோ வரையில் ஒதுக்கிய நிலையில், 11 மணிக்குள் 250 கிலோ வரையில் விற்பனையானது. அடுத்த சில மணி நேரங்களில் பல இடங்களில் முழுவதுமாக விற்று தீர்ந்தது.

கட்டுப்பாடின்றி வழங்கக் கோரிக்கை: கோடம்பாக்கத்தைச் சேர்ந்த பாக்கியலட்சுமி கூறியதாவது:

கடந்த சில மாதங்களுக்கு முன் கிலோ ரூ.118-க்கு விற்பனையான பருப்பு, ரூ.200-க்கு விற்பனையானது. அரசு இறக்குமதி செய்த துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.110-க்கு விற்பனை செய்யப்படுவதால், ரூ.100 வரையில் குறைதிருப்பதால் மகிழ்ச்சியாக உள்ளது. ஒருவருக்கு ஒரு கிலோ மட்டும் வழங்கப்படுகிறது. கட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என்றார்.

சென்னையில் 5 டன் விற்பனை: இதுதொடர்பாக கூட்டுறவுத் துறை

அதிகாரிகள் கூறியதாவது:

முதல் நாளில் துவரம் பருப்பை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். கூடுதலாக துவரம் பருப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் விருப்பம் தெரிவித்தனர். முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை 15 டன் துவரம் பருப்பு விற்பனை ஆனது. சென்னையில் மட்டும் 5 டன் துவரம் பருப்பு விற்பனையானது என்றனர்.

**சென்னையில் பலத்த மழை**



சென்னை, அதன் புறநகரில் சனிக்கிழமை பிற்பகலில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ததது. சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மழையால், சாலைகளில் ஆங்காங்கே வெள்ளம் போல் தண்ணீர் தேங்கியது.

ஒரு வாரம் தாமதத்துக்குப் பின்னர், வட கிழக்குப் பருவமழை புதன்கிழமை தொடங்கியது. கடந்த இரண்டு நாள்களாக, சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பலத்த மழை பதிவாகியது. சென்னை, புறநகர்ப் பகுதிகளில் சாரல் மழை மட்டுமே பெய்தது.

இந்த நிலையில், சென்னையில் சனிக்கிழமை அதிகாலை முதலே கரு மேகங்கள் சூழ்ந்து காணப்பட்டன. பிற்பகல் 2 மணிக்கு மேல் பாரிமுனை, ஈக்காட்டுத்தாங்கல், பல்லாவரம், தாம்பரம், பட்டினப்பாக்கம், மயிலாப்பூர், எழும்பூர், சைதாப்பேட்டை, கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், பரங்கிமலை, பழவந்தாங்கல், மடிப்பாக்கம், நங்கநல்லூர், பள்ளிக்கரணை, நீலாங்கரை, துரைப்பாக்கம், பெரும்பாக்கம், மேடவாக்கம் புழுதிவாக்கம், உள்ளகரம், வேளச்சேரி, கொட்டிவாக்கம், கீழ்க்கட்டளை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மழையால், சாலைகளில் வெள்ளம் போல் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிக்குள்ளாயினர். சாலைகளில் மழைநீர் வெள்ளமாக தேங்கி நின்றதால் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், அலுவலகம் முடித்து வீடு திரும்பியோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

பருவ மழைக்கு முன்னரே போதி அளவில் சாலைகள் பழுது நீக்கப்படாததால், பள்ளம் மேடாகக் காட்சியளித்தது. இதனால், ஆங்காங்கே போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

பெரும்பாலான இடங்களில் சாலையிலுள்ள பள்ளத்தில் மழை நீர் சூழ்ந்ததால், வாகன ஓட்டிகள் பலர் தடுமாறி கீழே விழுந்தனர்.

### காய்கறிகள் விலை குறைந்தது

கோயம்பேடு சந்தையில் வரத்து அதிகரித்ததால், காய்கறிகளின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தையில் கடந்த சில வாரங்களாக பெரிய வெங்காயம், பீன்ஸ், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் கிலோ ரூ.50-க்குள் மேல் விற்பனையாகின. இந்த நிலையில், கேரளம், கர்நாடகம், தமிழகம்

உள்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து வரத்து அதிகரித்ததால் சனிக்கிழமை அவற்றின் விலை 30 சதவீதம் வரை குறைந்துள்ளது.

இதுகுறித்து கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது:

மே, ஜூன் மாதங்களில் நாளொன்றுக்கு 300 டன் முதல் 350 டன் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. இதனால் அவற்றின் விலை கட்டுக்குள் இருந்தது.

இதையடுத்து, போதிய மழைப்பொழிவு, விளைச்சல் இல்லாததால் கடந்த சில மாதங்களாக 200 முதல் 230 டன் காய்கறிகளே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டதால் அவற்றின் விலை தொடர்ந்து அதிகரித்து வந்தது.

குறிப்பாக, பெரிய வெங்காயம் மொத்த விலையில் கிலோ ரூ.80 வரையிலும், தக்காளி ரூ.50 வரையிலும், முருங்கைக்காய் ரூ.100 வரையிலும் விலை உயர்ந்து காணப்பட்டன.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக கோயம்பேடு சந்தைக்கு 280 டன் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன. இதனால் அவற்றின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. வட கிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்யும்பட்சத்தில் விளைச்சல் அதிகரித்து காய்கறிகளின் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

சென்னையில் காய்கறிகளின் விலை நிலவரம் (சனிக்கிழமை நிலவரப்படி, கிலோவில்)

**சென்னையில் காய்கறிகளின் விலை நிலவரம்**
**(சனிக்கிழமை நிலவரப்படி, கிலோவில்)**

| | கோயம்பேடு சந்தைமொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| பெரிய வெங்காயம் | ரூ.25-40 | ரூ.35-50 |
| தக்காளி | ரூ.18-30 | ரூ.25 |
| கத்தரிக்காய் | ரூ.15-22 | ரூ.30 |
| உருளைக்கிழங்கு | ரூ.18 | ரூ.32 |
| கேரட் | ரூ.30 | ரூ.40 |
| பீட்ரூட் | ரூ.20 | ரூ.28 |
| காலிஃபிளவர் | ரூ.25 | ரூ. 36 |
| பாகற்காய் | ரூ.25 | ரூ.32 |
| பீன்ஸ் | ரூ.20-30 | ரூ.35 |
| அவரை | ரூ.32 | ரூ.45 |
| முருங்கைக்காய் | ரூ.40 | ரூ.55 |
| முட்டைக்கோஸ் | ரூ.12 | ரூ.20 |
| புடலை | ரூ.16 | ரூ.25 |
| இஞ்சி (புதியது) | ரூ.40 | ரூ.50 |
| இஞ்சி (பழையது) | ரூ.80 | ரூ.110 |

## சென்னை புறநகரில் பலத்த மழை



அம்பத்தூர் மண்டலத்துக்குள் அடங்கிய கொரட்டூர், பாடி, முகப்பேர், புதூர், மண்ணூர்பேட்டை ஆகிய பகுதிகளிலும், ஆவடி நகராட்சியில் அடங்கிய பட்டாபிராம், திருமுல்லைவாயல், அயப்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் கடந்த 2 நாள்களாக பெய்த மழையால் சாலை முழுவதும் குண்டும் குழியுமாக மாறியுள்ளது. அங்கு மழைநீர் தேங்கி குளம் போல் காட்சி தருகிறது. இதனால், வாகன ஓட்டிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கடந்த இரண்டு நாள்களாக, குப்பைகள் அகற்றப்படாமல் உள்ளதால் நகர் முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது.

அம்பத்தூர் வி.ஜி.என். நகர், சாந்தி நகர், மேற்கு முகப்பேர் ஏரித்திட்டம் ஆகிய பகுதிகளில் சாலையோரம் இருந்த பல மரங்கள், மழையால் சாய்ந்து விழுந்தன. அதிர்ஷ்டவசமாக பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

**பொன்னேரியில் பலத்த மழை**

பொன்னேரி, நவ.1: பொன்னேரியில், கடந்த 2 நாள்களாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பொன்னேரி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தொடர் மழையால், சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

பொன்னேரி-பழவேற்காடு சாலையில் உள்ள ரயில்வே மேம்பாலத்தின் கீழ், மழை நீர் தேங்கியுள்ளது. இதனால், இரு சக்கர வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் அப்பகுதியைக் கடந்து செல்ல சிரமப்படுகின்றனர்.

தேங்கியுள்ள மழை நீரை அகற்ற பேரூராட்சி நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**பொன்னேரியில் 56 மி.மீ. மழை**

திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக, பொன்னேரியில் 56 மில்லி மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக அம்பத்தூரில் 2 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து, கடந்த புதன்கிழமை முதல் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக பெய்த மழையில் பொன்னேரியில் அதிகபட்சமாக 56 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): பொன்னேரி 56, ஊத்துக்கோட்டை 12, கும்மிடிப்பூண்டி 5, திருவள்ளூர் 19, பூந்தமல்லி 7, அம்பத்தூர் 2, பூண்டி 5, செம்பரம்பாக்கம் 41, சோழவரம் 7, தாமரைப்பாக்கம் 31, செங்குன்றம் 8 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

### ஆழியாறு அணையில் தண்ணீர் திறப்பு

ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டுப் பாசனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டில் 6,400 ஏக்கரும், புதிய ஆயக்கட்டில் 44 ஆயிரம் ஏக்கரும் என மொத்தம் 50,400 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதில் புதிய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க உத்தரவிட்ட்டார்.

இதையடுத்து, ஆழியாறு அணையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை தண்ணீர் திறக்கப்பட்டது. இந்தத் தண்ணீர், பொள்ளாச்சி கால்வாய் ஆ மண்டலத்துக்கும், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் அ மண்டலத்துக்கும், சேத்துமடை கால்வாய் ஆ மண்டலத்துக்கும், ஆழியாறு ஊட்டுக் கால்வாய் ஆ மண்டலத்துக்கும் திறக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 1-ஆம் தேதி முதல் 135 நாள்கள் உரிய இடைவெளியில் ஒவ்வொரு மண்டத்துக்கும் 34 நாள்கள் தண்ணீர் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் 22,332 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் வால்பாறை சட்டப்பேரவை உறுப்பினர் ஆறுமுகம், கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர்

கருணாகரன், ஆழியாறு பாசனத் திட்டக் குழுத் தலைவர் சின்னச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோவையில் பரவலாக மழை: போக்குவரத்து பாதிப்பு

கோவையில் இரண்டாவது நாளாக பெய்த மழையின் காரணமாக அவிநாசி சாலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு தாற்காலிகமாக போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது.

கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து உக்கடம், ராமநாதபுரம், காந்திபுரம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் சனிக்கிழமை தொடங்கிய மழை இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் நீடித்தது. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை பெய்த மழையால் அவிநாசி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. லட்சுமி மில் சந்திப்பு வழியாக திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகள் பங்கஜா மில், ராமநாதபுரம், சிங்காநல்லூர், ஹோப் காலேஜ் சாலை வழியாகத் திருப்பி விடப்பட்டன.

இதனிடையே, பாப்பநாயக்கன்பாளையம் சிக்னல் அருகேயும், சிவானந்தா காலனியிலும் சாலையில் மரம் சரிந்து விழுந்தது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து தடைபட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புத் துறையினர் மரத்தை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீரமைத்தனர். உக்கடம் மீன் மார்க்கெட் சாலையில் உள்ள டோபி காலனியில் உள்ள 10-க்கும் மேற்பட்ட வீடுகளில் மழை நீர் புகுந்தது.

மழை நீரில் சிக்கிய கார்: கோவை டவுன்ஹால் அருகே உள்ள லங்கா கார்னர் ரயில்வே மேம்பாலத்தின்கீழ் தனியார் கால் டாக்ஸி மழை நீரில்

சிக்கியது. இதையடுத்து, அங்கு வந்த கோவை தெற்கு தீயணைப்புத் துறையினர் டாக்ஸி ஓட்டுநர், அதில் இருந்த பயணியை கயிறு மூலம் பத்திரமாக மீட்டனர். அவிநாசி சாலை மேம்பாலத்துக்கு கீழ் கார், இருசக்கர வாகனங்கள் மழை நீரில் சிக்கின.

## நிலத்தடி நீர்மட்டம் குறைவது குறித்து பள்ளி மாணவர்கள் ஆய்வு

காங்கயம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைவது குறித்து, சிவன்மலை ஜேசீஸ் பள்ளி மாணவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

திருப்பூரில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு இந்த மாதம் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

இதில், காங்கயம் ஜேசீஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் பூமிகா, பிரியங்கா, நிர்மல், ரமேஷ்குமார், சஞ்சய் ஆகியோர் காங்கயம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைவதற்கான காரணங்கள் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். ஆசிரியர்கள் ராஜேந்திரன், பெர்னாட்ஷா ஆகியோர் உதவியுடன் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள இந்த மாணவர்களுக்கு, திருப்பூர் மாவட்ட உதவி நீர் வல்லுனர் குருமூர்த்தி பள்ளிக்கு வந்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

ஆய்வில் ஈடுபட்டுள்ள மாணவர்களை பள்ளித் தலைவர் ராமசாமி, தாளாளர் பழனிசாமி, பள்ளி முதல்வர் சாவித்திரி ஆகியோர் வாழ்த்தினர்.

## பருத்திக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும்:மத்திய அரசுக்கு சைமா கோரிக்கை

ஜவுளித்துறை மேலும் வளர்ச்சியடைய பருத்திக் கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என மத்திய அரசுக்கு சைமா கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்க (சைமா) தலைவர் ஈஸ்வரன், பிரதமர் மோடிக்கு அனுப்பியுள்ள மனு:

பருத்தி பஞ்சு விலை சீராக இல்லாததால், நிட்டிங், விசைத்தறி, கைத்தறி உள்ளிட்ட ஜவுளித் தொழில்கள் பாதிப்படைந்துள்ளன. காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மற்றும் பெரிய பஞ்சு ஏற்றுமதியாளர்களே பஞ்சு விலை உயர்வுக்கு காரணம்.

பஞ்சு வாங்கி இருப்பு வைக்கும் காட்டன் கார்ப்பரேஷன், சீசன் காலத்தில் விற்பனை செய்வதில்லை. நடப்பு ஆண்டில் மட்டும் விற்பனை செய்யாமல் 80 லட்சம் பேல் (ஒரு பேல்-175 கிலோ) இருப்பு வைத்து, செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. பெரிய ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும் லட்சக்கணக்கான பேல் பருத்தி வழங்கப்படுகிறது. அதனால், தமிழக நூல் மில்கள், மூலப் பொருளின்றி சிரமப்படுகின்றன. விவசாயத்துக்கு அடுத்ததாக உள்ள ஜவுளித் துறையின் வளர்ச்சி கருதி நாட்டின் பருத்தி கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

விவசாயிகளிடம் இருந்து நியாயமான விலையில் பருத்தி வாங்கி, ஜவுளித் துறையினருக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு சீசனிலும் 325 லட்சம் பேல், பருத்தி உற்பத்தியாகிறது. உள்நாட்டு தேவைக்குபோக மீதமுள்ள பருத்தியை, ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முதல் ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும். அரசு அனுமதி பெற்ற பிறகே பருத்தி ஏற்றுமதி செய்யும் வகையில் கட்டுப்பாடு விதிக்க வேண்டும். பருத்தி கொள்கையில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டுமே, ஜவுளித்துறை மேலும் வளர்ச்சி அடையும் எனத் தெரிவித்துள்ளார்.

## திருப்பூரில் விடிய விடிய பெய்த மழை

திருப்பூரில் சனிக்கிழமை மாலை தொடங்கிய மழை விடிய விடிய பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால், கடந்த சில நாள்களாக பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்டம் முழுவதும் சனிக்கிழமை மாலையில் இருந்து பலத்த மழை பெய்தது.

மாலை துவங்கிய மழை, இரவு 7 மணிக்கு மேல் இடி, மின்னலுடன் இரவு 10 மணி வரை நீடித்தது. அதன்பின், விடிய விடிய பெய்த சாரல் மழை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரை நீடித்தது.

இம்மழையால் குமார் நகர், ஊத்துக்குளி சாலையில் சில இடங்களில் மரங்கள் முறிந்து கிழே விழுந்தன. மேலும், புஷ்பா திரையரங்கு ரவுண்டானா, ராயபுரம், அணைப்பாளையம் பகுதியில் உள்ள ரயில்வே தரைப்பாலம் உள்ளிட்ட மாநகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் குளம் போல் தேங்கி நின்றது.

மாநகரச் சாலைகளின் பல்வேறு இடங்கள், சேரும் சகதியுமாக மாறியதால், வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகினர். மேலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் பதிவான மழை அளவு விவரம்: (மில்லி மீட்டரில்) அவிநாசி- 14, திருப்பூர் 23, உடுமலைப்பேட்டை 6, பல்லடம் 22, தாராபுரம் 36, காங்கயம் 60 என மழை பதிவானது.

## தரமற்ற நெய் உற்பத்தியைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

தரமற்ற நெய் உற்பத்தியைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என காங்கயம் நெய் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காங்கயம் பகுதியில் சுமார் 10-க்கும் மேற்பட்ட நெய் உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. காங்கயம், ஊத்துக்குளி, திருப்பூர், தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள அரசு, தனியார் பால் பண்ணைகளிலிருந்தும், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் வெண்ணெயை கொள்முதல் செய்து, நவீன இயந்திரங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, நெய் தயாரிக்கப்படுகிறது.

மாதம் ஒன்றுக்கு காங்கயத்தில் இருந்து சுமார் 10 லட்சம் கிலோ நெய் தயாரிக்கப்பட்டு தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கும் துபை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய வெளிநாடுகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

இந்நிலையில், இந்தத் தொழிலில் தரமற்ற நெய் உற்பத்தி செய்வோரைக் கண்டறிந்து அவர்கள் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என காங்கயம் நெய் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு வெண்ணெய் நெய் உற்பத்தியாளர் சங்கப் பொருளாளர் கணேஷ் கூறுகையில், "காங்கயத்தில் தயாரிக்கப்படும் நெய், அக்மார்க் முத்திரையுடன் தான் விற்பனைக்கு வரும். இந்த நிலையில் தரமற்ற முறையில் ரசாயன கலவை கொண்டு தயாரிக்கப்படும் நெய், போலி முகவரியுடன் கூடிய பாக்கெட் மற்றும் டின்களில் மார்க்கெட்டில் குறைந்த விலையில் விற்பனையாவதால், எங்களின் விற்பனை பாதிக்கப்படுவதோடு அதை உணவுக்கு பயன்படுத்துவோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரமற்ற நெய் உற்பத்தியாளர்களை கண்டறிந்து, அவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நெய் மீதான வரிகளை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

**பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை**

மொடக்குறிச்சி ஒன்றியம், அவல்பூந்துறை பேரூராட்சிக்கு உள்பட்ட சின்னதிருமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு தீபாவளி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

சின்னதிருமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவுக்கு, ஈரோடு ஆவின் பால் ஒன்றியத் தலைவர் பி.சி.ராமசாமி தலைமை வகித்தார். அவல்பூந்துறை பேரூராட்சித் தலைவர் ஆர்.பி.கதிர்வேல் முன்னிலை வகித்தார். சங்கத் தலைவர் பி.சிவகுமார் வரவேற்றார்.

ஈரோடு மாநகர் மாவட்ட அதிமுக செயலர் வி.பி.சிவசுப்பிரமணி, 52 உறுப்பினர்களுக்கு ரூ. 1 லட்சம் மதிப்பிலான தீபாவளி ஊக்கத்தொகை, இனிப்புகளை வழங்கினார்.

இதில், ஆவின் மேலாளர் (பால்சேகரம்) ஆர்.வரதராஜன், நவரசம் கல்லூரித் தலைவர் கே.தாமோதரன், நவரசம் பள்ளித் தலைவர் பழனிசாமி, அவல்பூந்துறை பேரூராட்சி துணைத் தலைவர் பொன்னுசாமி, கவுன்சிலர்கள் தினகரன், செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தொடர் மழை: ஈரோடு ஓடைகளில் கரைபுரண்டோடும் மழை நீர்**

தொடர் மழை காரணமாக ஈரோடு ஓடைகளில் மழைநீர் கரைபுரண்டு ஓடுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், ஈரோடு மாவட்டத்தின் நீராதாரமாக விளங்கும் பவானிசாகர் அணை, வரட்டுப்பள்ளம் அணை, குண்டேரிப்பள்ளம் அணை ஆகியவை வேகமாக நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக,

வரும் காலத்தில் விவசாயத்துக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படாது என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.

ஈரோட்டில் சனிக்கிழமை காலை முதல் கடும் வெயில் சுட்டெரித்தது. இந்நிலையில், மாலை 5 மணிக்கு திடீரென பலத்த மழை பெய்தது.

தொடர்ந்து நான்கு மணி நேரத்துக்கும் மேல் மழை பெய்ததால் சாக்கடை நிரம்பி சாலைகளில் தண்ணீர் ஓடியது. ஈரோடு பெருந்துறை சாலை, தெப்பக்குளம் வீதி, திரு.வி.க. வீதி, கிருஷ்ணம்பாளையம், கருங்கல்பாளையம், வைராபாளையம், மணிக்கூண்டு, ஸ்டோனி பாலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது.

ஈரோடு நகரம் வழியாக பாயும் பெரும்பள்ளம் ஓடை, பிச்சக்காரன்பள்ளம் ஓடை, சுண்ணாம்பு ஓடை உள்ளிட்டவற்றில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. கன மழை தொடர்ந்ததால் ஞாயிற்றுக்கிழமை மாலை சாலைகளிலும், ஓடைகளிலும் மழை நீர் கரைபுரண்டு ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் கடும் சிரமத்துக்குள்ளானார்கள்.

உதகை நகரம் போல ஈரோடு நகரம் ஞாயிற்றுக்கிழமை குளிர்ந்து காணப்பட்டது. ஈரோட்டில் பெய்த கனமழையால் பிரப் சாலை, மணிக்கூண்டு பகுதி, கொங்கலம்மன் வீதி, மேட்டூர் சாலை, சத்தியமங்கலம் சாலையிலும் மழை தண்ணீர் வெள்ளம் போல் ஓடியது. இதனால் தீபாவளி பண்டிகைக்கு துணி வாங்குவதற்காக கனி மார்க்கெட், பிரப் சாலை, மணிக்கூண்டு ஆகிய பகுதிகளுக்கு வந்த பொதுமக்கள் மழையில் நனைந்தபடியே சென்றனர்.

தீபாவளி நெருங்கி வரும் நிலையில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஈரோடு ஜவுளிச்சந்தையில் கூட்டம் அலைமோதி வருகிறது. ஆனால், மழை காரணமாக ஞாயிற்றுக்கிழமை வழக்கத்தை விட காலை முதல்

மதியம் வரை தீபாவளி விற்பனை மந்தமாக காணப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

சென்னிமலையில் 122 மி.மீ., பெருந்துறையில் 60 மி.மீ., புங்கம்பாடியில் 56.30 மி.மீ., ஓலப்பாளையத்தில் 53 மி.மீ., அரச்சலூரில் 45 மி.மீ., ஈரோட்டில் 40 மி.மீ., பவானியில் 28.4 மி.மீ., மொடக்குறிச்சியில் 24 மி.மீ., எலந்தகுட்டைமேட்டில் 24 மி.மீ., கோபியில் 15 மி.மீ., சத்தியமங்கலத்தில் 10.8 மி.மீ., ஒரத்துப்பாளையத்தில் 10 மி.மீ., பவானிசாகரில் 7.2 மி.மீ., கொடுமுடியில் 2 மி.மீ. மழை பதிவானது.

விவசாயத் தொழிலாளி சாவு: பவானி மற்றும் அந்தியூர் வட்டாரத்தில் இடி மின்னலுடன் விட்டுவிட்டு சனிக்கிழமை பிற்பகல் முதல் மழை பெய்து வருகிறது.

பவானியை அடுத்த மோளகவுண்டன்புதூர் காலனியைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளி சேம்பான் (55). இவர், அப்பகுதியில் உள்ள தோட்டத்தில் பணியை முடித்துக் கொண்டு தனது இருசக்கர வாகனத்தில் சனிக்கிழமை மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, இடி தாக்கியதில் உடல் கருகி உயிரிழந்தார்.

பவானியை அடுத்த பெரியமோளபாளையத்தைச் சேர்ந்தவர் வள்ளியம்மாள். இவரது மகன் செல்வராஜ். இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வந்த நிலையில் இவரது வீட்டில் ஞாயிற்றுக்கிழமை இடி இறங்கியது. இதில், அதிர்ஷ்டவசமாக உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

## கறவை மாடு வளர்ப்புக்கான இலவசப் பயிற்சி ஈரோட்டில் நவ. 3-இல் தொடக்கம்

ஈரோட்டில் விஞ்ஞான முறையிலான கறவை மாடு வளர்ப்பு இலவசப் பயிற்சி நவம்பர் 3, 4-ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து, ஈரோடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர், தலைவர் சனிக்கிழமை விடுத்த செய்தி: ஈரோடு சத்தி சாலையில் வீரப்பன்சத்திரம் பகுதியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மையத்தில் நவம்பர் 3, 4-ஆம் தேதிகளில் "விஞ்ஞான முறையிலான கறவை மாடு வளர்ப்பு' என்ற தலைப்பில் இலவசப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில், விஞ்ஞான முறையிலான கறவை மாடு வளர்ப்பு குறித்த விரிவான பாடங்கள் நடத்தப்படுவதுடன் கலந்துரையாடல், விடியோ படக்காட்சி, கேள்வி பதில்களும் இடம்பெற உள்ளன. பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் நேரிலோ அல்லது 0424-2291482 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

## ஒரே நாளில் 2,688 கிலோ மலிவு விலை துவரம் பருப்பு மதுரையில் விற்பனை

மதுரையில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் மலிவுவிலையில் 2,688 கிலோ துவரம் பருப்பு 3,277 பேருக்கு மாவட்ட நிர்வாகத்தால் விற்பனை செய்யப்பட்டது.

வெளிச்சந்தையில் உயர்ந்துவரும் துவரம்பருப்பின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் மலிவு விலையில் துவரம்பருப்பை பொதுமக்களுக்கு தமிழக அரசு வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

மதுரையில் மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் உத்தரவின் பேரில் பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, மதுரை கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டசாலை உள்ளிட்ட 7 கூட்டுறவு பண்டசாலைகள் சார்பில் மகால் சாலை, திருநகர், அழகப்பன்நகர், பொன்னகரம், கே.கே.நகர், பைபாஸ் சாலை, கே.புதூர், டி.வி.எஸ்.நகர், ரேஸ்கோர்ஸ் காலனி, வசந்த்நகர், புதுநகர், திருமங்கலம்

ஆகிய இடங்களில் மலிவு விலையில் துவரம் பருப்பு விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிலோ துவரம் பருப்பு பாக்கெட் ரூ.110 மற்றும் அரை கிலோ பாக்கெட் ரூ.55 என விற்கபட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரையில் 2,688 கிலோ துவரம் பருப்பு 3,277 பேருக்கு விற்கப்பட்டதாக கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கூறினர்.

மதுரை மாவட்டத்தில் தீபாவளி நேரத்தில் மலிவுவிலை துவரம் பருப்பு விற்பனை தங்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது என பெண்கள் கூறினர்.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை:அய்யனார் கோயில் ஆற்றில் தண்ணீர் வரத்து

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மழை பெய்ததால், அய்யனார் கோயில் ஆற்றில் தண்ணீர் அதிகளவில் சென்றது.

ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழையால், நீராவி அருவி, முள்ளிக்கடவு ஆறு, மாவரசியம்மன் கோயில் பகுதி, வழுக்கு பாறை மற்றும் மலட்டாறு போன்ற பகுதிகளில் தண்ணீர் வந்தது. மலையடிவாரத்தில் அய்யனார் கோயில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை மூலம் நகராட்சி குடிநீர் தேக்கத்திற்கு நீர் வரத்து அதிகரித்தது.

ஆனால் போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் வறண்டு காணப்பட்டன. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை பெய்து வருகிறது. இதனால் அடிவாரத்தில் உள்ள அய்யனார் கோயில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் தற்போது தடுப்பணையையும் தாண்டி கண்மாய்களுக்கு நீர் செல்லத் துவங்கி உள்ளது. முக்கிய விவசாய கண்மாய்களான கொண்டனேரி கண்மாய், புதுக்குளம் கண்மாய், பிறண்டைக் குளம், கருங்குளம், கடம்பன் குளம் உள்ளிட்ட நீர் நிலைகளுக்கு முடங்கியாறு வழியாக தண்ணீர் செல்ல துவங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மலைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் ஆற்றில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அய்யனார்கோவில், சாஸ்தாகோவில் வனப்பகுதிக்கு சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வந்ததால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

**மழைநீருடன் கலந்த கழிவு நீர்:**

ராஜபாளையம் அருகே தளவாய்புரம் ஊராட்சிக்கு உட்பட்டது எம்.ஆர் நகர் பகுதி. இப் பகுதியில் தமிழக அரசின் பசுமை வீடுகள் உட்பட 50க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. ஆனால், குடிநீர், தெரு விளக்கு, நடைபாதை, கழிவு நீர் வடிகால் என எந்த அடிப்படை வசதிகளும் இல்லை. மழைநீர் செல்ல வடிகால் வசதி இல்லாததால் ஞாயிற்றுக்கிழமை பெய்த மழை நீர் வெளியேற முடியாமல் தேங்கியுள்ளது. மழை நீருடன் இப் பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்தின் கழிவு நீரும் தேங்கி நோய்களைப் பரப்பும் நிலை ஏற்பட்டுள்ளது. கழிவு நீரை வெளியேற்ற தளவாய்புரம் ஊராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**நிலக்கடலை பயிரில் கம்பளி பூச்சிகளை அழிக்க வேளாண்மை துறை அதிகாரிகள் யோசனை**

விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம் பகுதியில் நிலக்கடலை பயிரை சிவப்பு கம்பளிபூச்சி தாக்குதலில் இருந்து காக்க வேளாண்மை அறிவியல் நிலைய அதிகாரி கிருஷ்ணன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

திருச்சுழி, நரிக்குடி, தொட்டியாங்குளம், பொய்யாங்குளம், குறிஞ்சாங்குளம், செம்பட்டி, இலங்கிபட்டி, மணவராயனேந்தல் மற்றும் காரியாபட்டி பகுதிகளில் தற்சமயம் நிலகடலை அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிரில் சிவப்பு கம்பளிப்பூச்சியின் தாக்குதல் அதிகளவில் உள்ளது.

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் முனைவர் பால்பாண்டி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி ஆகியோர் உத்தரவின் பேரில் குறிஞ்சாங்குளம் பகுதியில் பயிர் பாதுகாப்புத்துறை தொழில்நுட்ப வல்லுநர் ராஜேந்திரனுடன் குழுக்களாக சென்று பாதிக்கப்பட்ட பயிர்களை நேரில் ஆய்வு செய்தனர்.

பின்னர் இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

நிலக்கடலையில் சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. இதனால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு நிலக்கடலை மகசூல் குறையக்கூடும். இப்பூச்சியை கட்டுப்படுத்த கீழக்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். வயல்களில் களைகள் இல்லாமல் பார்த்து கொள்ளவேண்டும். பயிர் சுழற்சி முறையை கடைப்பிடிக்க வேண்டும். கண்ணுக்கு தெரிகின்ற முட்டை மற்றும் இளம் பருவ புழுக்களை கையால் பொறுக்கி அழித்துவேண்டும். சொக்கப்பான் அல்லது விளக்குபொறி ஏக்கருக்கு 3 முதல் 4 வரை வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவேண்டும்.

வைரஸ் கரைசலை ஒட்டும் திரவத்துடன் கலந்து ஒரு ஏக்கருக்கு 300 மிலி என்ற அளவில் தெளிக்கவேண்டும். வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சத கரைசலை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**அருப்புக்கோட்டையில் தொடர்மழை**

அருப்புக்கோட்டை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சனிக்கிழமை காலை 6 மணி முதல் காலை 10.30 மணி வரை தொடர்ந்து நல்ல மழை பெய்தது.

கடந்த சில மாதங்களாகவே அருப்புக்கோட்டையைச் சுற்றியுள்ள நீராவி, ம.ரெட்டியபட்டி, கல்லூரணி, கல்குறிச்சி, பாலவநத்தம், சேதுராஜபுரம், பந்தல்குடி, கோடாங்கிபட்டி முதலான கிராமங்களில் அடுத்தடுத்து நல்ல மழை பெய்தது.

ஆனால் அருப்புக்கோட்டை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மட்டும் மழை பெய்யாமல் வறண்ட வானிலையே காணப்பட்டது. இந்நிலையில் சனிக்கிழமை பெய்த மழையால் அருப்புக்கோட்டையில் குளிர்ச்சியான தட்ப வெப்பம் நிலவுகிறது.

**சாத்தூர் வட்டத்தில் பயறு வகை சாகுபடி: வேளாண்மை உயர் அதிகாரிகள் ஆய்வு**

பயறு வகை பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க அமைக்கப்பட்டுள்ள தொகுப்பு முறை செயல்விளக்கத் திடல்களை வேளாண் உயர் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தனர்.

தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டத்தில் உளுந்து மற்றும் பாசிபயறுகளில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நடப்பாண்டில் சுமார் 1000 ஹெக்டேர் பரப்பில் ஒத்தையால், ஒ.மேட்டுப்பட்டி, கரிசல்பட்டி, நள்ளி, கோசுகுண்டு, மேலமடை, போத்திரெட்டிபட்டி, அம்மாபட்டி மற்றும் சூரங்குடி ஆகிய பகுதிகளில் தொகுப்பு முறை செயல்விளக்கத்திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திடல்களை விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கனகராசன் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். அப்போது பயறு வகை பயிர்களில் இரண்டு சதவீத டிஏபி கரைசல் தெளிக்கும் பணியையும் பார்வையிட்டார். இதன் மூலம் 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். இத்திட்டத்தின் கீழ்

ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 4000 என்ற அளவில் வழங்கப்பட்ட இடுபொருள்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும் போத்திரெட்டிபட்டி கிராமத்தைச் சேர்ந்த ஒரு பயனாளிகளிக்கு ரூபாய் 47250 மானிய விலையில் வழங்கப்பட்ட ரேட்டோவேட்டர் (சுழல் கலப்பை) மற்றும் கலிங்கபட்டியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 75000 மானிய விலையில் வழங்கபட்ட பவர்டில்லர் மற்றும் சடையம்பட்டி கிராமத்தை சேர்ந்த ஒரு பயனாளிக்கு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் 47500 மானியத்தில் அமைக்கப்பட்ட ஒருகிணைந்த பண்ணையம் ஆகியவற்றையும் ஆய்வு செய்தார். ஆய்வின் போது சாத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சக்கரவர்த்தி, வேளாண்மை அலுவலர் மகாலட்சுமி, துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**உரங்களைப் பதுக்குவோருக்கு ஆட்சியர் எச்சரிக்கை**

உரங்களை பதுக்குவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.ராஜாராமன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விருதுநகர் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் 51,996 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் உத்தேசமாக 40 ஆயிரம் ஹெக்டேர் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. ராபி பருவத்தில் பயிர் சாகுபடிக்குத் தேவையான யூரியா 1400 மெட்ரிக் டன், டிஏபி 800 டன், பொட்டாஷ் 400 டன், காம்ப்ளக்ஸ் 550 டன் என்ற நிலையில் தனியார் உர விற்பனை

நிலையம் மற்றும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு உள்ளது.

பருவமழை தொடங்கி விட்டதால் யூரியா தேவை அதிகமாகும் என்ற நிலையில் தனியார் விற்பனை நிலையங்களில் யூரியா உரத்தைப் பதுக்கி இருந்தாலோ அல்லது அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்தாலோ, உரக்கட்டுப்பாட்டுச் சட்டம் 1985-இன் படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களை மூட்டையில் குறிப்பிட்ட சில்லறை விற்பனை விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யக் கூடாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**ராஜபாளையம் பகுதியில் சாரல் மழை**

ராஜபாளையம் பகுதியில் வடகிழக்கு பருவமழை பெய்யவேண்டிய காலத்தில் சாரல் மழை பெய்வதால் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

ராஜபாளையம் மற்றும் தேவதானம்,சேத்தூர் பகுதியில் அதிக பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு இப் பகுதியில் கடந்த ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவமழை குறைந்த அளவு கூட பெய்யாத நிலையில், அக்டோபர் இறுதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். இதனால் பெரும்பாலான விவசாயிகள் நெல் நடவுக்கு நாற்று விட்டுள்ளனர்.

தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பெய்யத் துவங்கியுள்ளது. அருகில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம், பாபநாசம் பகுதியில் நல்லமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் ராஜபாளையம் பகுதியில் வனப்பகுதியில் குறைந்த அளவே மழை பெய்துள்ளது. ராஜபாளையம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் சனிக்கிழமை பரவலாக சாரல் மழையே

பெய்தது. இதனால் விவசாயிகள் இந்த பருவத்தில் தேவையான மழை உரியகாலத்தில் பெய்யுமா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

**ராமநாதபுரத்தில் பலத்த மழை**

ராமநாதபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை காலையில் பலத்த மழை பெய்ததன் காரணமாக நகரின் முக்கிய சாலை வீதிகளில் மழைநீர் தேங்கியது.

ராமநாதபுரத்தில் சனிக்கிழமை இரவும், ஞாயிற்றுக்கிழமை காலையிலும் பலத்த மழை பெய்தது. இதனால் நகரில் அரசு மருத்துவமனை சாலை, பழைய மற்றும் புதிய பேருந்து நிலைய பகுதிகள், நாகநாதபுரம், தங்கப்பா நகர், தங்கப்பா புரம், வசந்த நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்றது. நகர் முழுவதும் சாலைகள் குண்டும், குழியுமாக காட்சியளித்தன.

ராமநாதபுரத்தில் அதிக அளவாக 42.60 மி.மீ மழையும், குறைந்த அளவாக பரமக்குடியில் 1.40 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் மழையளவு: (மி.மீட்டரில்) கமுதி-12, முதுகுளத்தூர்- 11.40, பாம்பன்-12.80, பரமக்குடி-1.40, ராமநாதபுரம்-42.60, திருவாடானை-30, தொண்டி-10.90, பள்ள மோர் குளம்-38, மண்டபம்-20, ராமேசுவரம்-20.20, தங்கச்சி மடம்-13, வட்டாணம்-10, தீர்த்தாண்டதானம்-10, ஆர்.எஸ்.மங்கலம்-11.20, கடலாடி-6.20, வாலிநோக்கம்-12.60. மொத்த மழையளவு- 262.30 மி.மீ.சராசரி மழையளவு- 16.39மி.மீ.

**மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்துக்கு மீண்டும் நீர் திறப்பு**

மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு சனிக்கிழமை மாலை முதல் மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த நிலையில், கால்வாய் பாசனப் பகுதிகளில் மழை பெய்ததன் காரணமாக இரு தினங்களுக்கு முன்பு அணையிலிருந்து கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது.

தற்போது, பாசனப் பகுதிகளில் மழை பெய்வது குறைந்ததால், சனிக்கிழமை மாலை முதல் மீண்டும் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதையடுத்து, ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 62.45 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 6,412 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 1,400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 26.54 டி.எம்.சி.

**மக்கள் நலக் கூட்டியக்க குறைந்தபட்ச**
**செயல் திட்டம் இன்று வெளியீடு**

மக்கள் நலக் கூட்டியக்கத்தின் குறைந்தபட்ச செயல் திட்டம் தொடர்பான அறிக்கை திங்கள்கிழமை வெளியிடப்பட உள்ளது.

மதிமுக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய 4 கட்சிகள் இணைந்து மக்கள் நலக் கூட்டியக்கமாக இணைந்து வரும் சட்டப்பேரவைத் தேர்தலை இணைந்து சந்திக்கப் போவதாக அறிவித்துள்ளனர். இதற்காக கூட்டியக்கத்தின் குறைந்தபட்ச செயல்திட்டத்தைத் தயாரித்துள்ளனர்.

இதை இறுதி செய்து, சென்னை எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ திங்கள்கிழமை வெளியிட உள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

**மத்தூரில் விவசாயத் தொழிலாளர்கள் பேரவைக் கூட்டம்**

மத்தூரில் விவசாயத் தொழிலாளர்கள் பேரவைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு பேரவை நிர்வாகி ஜி.கனகராஜ் தலைமை வகித்தார். கௌரவத் தலைவர் எஸ்.கண்ணு வரவேற்றார். பி.கோவிந்தராஜ், கே.சிங்காரம், ஆர்.ஆதிமுலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அந்தச் சங்கத்தின் மாவட்ட செயலாளர் வே.கிருஷ்ணமூர்த்தி கோரிக்கைகள் குறித்து பேசினார். ஊரக வேலை உறுதித் திட்டப் பணிக் காலத்தை 200 நாள்களாக உயர்த்த வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் அனைத்து கிராமங்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## சம்பா சாகுபடிக்காக திருச்சி வந்தது 1340 டன் காம்ப்ளக்ஸ், சல்பேட் உரம்

சம்பா நெல் சாகுபடிக்குத் தேவைப்படும் நுண்ணூட்டத்துடன் கூடிய காம்ப்ளக்ஸ் மற்றும் அமோனியம் சல்பேட் உரம் 1340 டன் சனிக்கிழமை திருச்சி வந்தது.

கொச்சியில் இயங்கிவரும் மத்திய அரசின் பாக்ட் நிறுவனத்திலிருந்து சரக்கு ரயில் மூலம் திருச்சி குட்ஷெட் பகுதிக்கு காம்ப்ளக்ஸ் உரம் 515 டன்னும், அமோனியம் சல்பேட் உரம் 815 டன்னும் வந்தன. இந்த டன் உரம் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைக்காக அனுப்பப்பட உள்ளது. உரங்களை லாரிகள் மூலம் அனுப்பும் பணியைப் பார்வையிட்ட திருச்சி வேளாண் இணை இயக்குநர் இரா. சந்திரசேகரன் கூறியது:

காம்ப்ளக்ஸ் உரத்தில் தழை மற்றும் மணிச்சத்து தலா 20 %-மும், கந்தகச்சத்து 13%மும், துத்தநாக சத்து 0.3 %மும் உள்ளது.

நெல் சாகுபடியில் அதிக விளைச்சலைப் பெற பேரூட்டச் சத்துகளான தழை,மணி,சாம்பல் சத்துடன் தற்பொழுது நுண்ணூட்ட சத்தான துத்தநாகமும் அவசியம் இட வேண்டிய சூழலில் பேரூட்டச் சத்துடன் 0.3% துத்தநாக நுண்ணூட்டம் சேர்க்கப்பட்ட காம்பளக்ஸ் உரம்

வந்துள்ளது. திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் 360 டன் அளிக்கப்பட உள்ளது.

மண் ஆய்வு முடிவின்படி பரிந்துரை செய்யப்படும் அளவில் உரத்தை இட்டு மகசூலை பெருக்கிட வேண்டும் என்றார் அவர். ஆய்வின்போது வேளாண் உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) க. பால்ராஜ்,வேளாண் அலுவலர் இரா. சுகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சார்பில் 1,114 பேருக்கு ரூ. 1.52 கோடி கடனுதவி**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, மதுக்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் சார்பில் கடனுதவி வழங்கும் விழா பட்டுக்கோட்டையில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார். விழாவில் தமிழக வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் பங்கேற்று, 1,114 பேருக்கு சுமார் ரூ. 1.52 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளை வழங்கிப் பேசியது:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் நிகழாண்டில் ரூ. 5,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி நிகழாண்டில் ரூ. 181 கோடி இலக்கு நிர்ணயம் செய்து பயிர்க் கடன்களை விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இந்த வங்கி கடந்த 3 ஆண்டுகளில் சுமார் ரூ. 10 கோடி லாபத்தில் இயங்கி வருகிறது. என்றாலும், கடன் பெறும் அனைவரும் கடனை குறித்த காலத்தில் திரும்ப செலுத்தினால் மட்டுமே, தங்கள் தொழிலை விரிவுபடுத்த வங்கியில் மேலும் அதிக கடனுதவியைப் பெறமுடியும். வங்கியும் நல்ல வளர்ச்சி அடையும் என்றார் அமைச்சர். விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் பெ. சந்திரசேகரன், மாவட்ட ஊராட்சித்

தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ச. சுப்பிரமணியன், துணைப் பதிவாளர் வே. நாராயணன், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் துரை. திருஞானம், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் ஆர். காந்தி, முன்னாள் எம்எல்ஏ பி.என். ராமச்சந்திரன், மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் எஸ். மோகன், பட்டுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் எஸ்.ஆர். ஜவஹர்பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காய்கறி சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் நெல், சின்ன வெங்காயம், நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டு வந்த விவசாயிகள், நிகழாண்டில் காய்கறி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டம் பருத்தி, மக்காசோளம், சின்ன வெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்வதில், தமிழக அளவில் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, நிகழாண்டு நெல் 516 ஹெக்டேரிலும், கரும்பு 4,859 ஹெக்டேரிலும், பயறுவகை பயிர்கள் 837 ஹெக்டேரிலும், தானியப் பயிர்கள் 36,732 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்து பயிர்கள் 825 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. போதிய விலையின்மை, பருவ மழையின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாவட்ட விவசாயிகள் தற்போது காய்கறிகளை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நிகழாண்டில் கத்தரி 82 ஹெக்டேர் பரப்பளவிலும், தக்காளி 104 ஹெக்டேரிலும், வெண்டை 23 ஹெக்டேரிலும், பாகற்காய் 19 ஹெக்டேரிலும், புடலங்காய் 28 ஹெக்டேரிலும், முருங்கை 9 ஹேக்டேரிலும், பீர்க்கங்காய் 7 ஹெக்டேரிலும், முள்ளங்கி 6

ஹெக்டேரிலும், மிளகாய் 191 ஹெக்டேர் பரப்பளவிலும் என மொத்தம் 469 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

குறுகிய காலத்தில் எளிதில் அறுவடை, செலவு குறைவு உள்ளிட்ட காரணங்களால் பெரம்பலூர் மாவட்டத்தில் வரும் ஆண்டுகளில் காய்கறிகளை சாகுபடி அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர் கீழக்கணவாய் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள்.

## பெரம்பலூர் அருகே இலவச காளான் வளர்ப்பு பயிற்சி

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரம் கிராமத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கான காளான் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த இலவசப் பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்ற 33 விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்த கையேடுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## அரியலூரில் 6 நாட்களாக மழை

அரியலூர் மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாகப் மழை பெய்து வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (அக்.27) அன்று தொடங்கிய மழை தொடர்ந்து 6 வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் மழை பெய்து வருகிறது. அரியலூர் மாவட்டம், திருமானூர் பகுதியைத் தவிர மற்ற அனைத்து பகுதிகள் வறட்சிப் பகுதியாகும். கடந்த 10 ஆண்டுகளாக மழை அளவு குறைந்துள்ளது.

இதன் காரணமாக ஏரி, குளங்கள் வறண்டு நீரின்றி கிடந்த நிலையில், தற்போது பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது தா.பழூர் பகுதியில் 28 ஆயிரம் ஏக்கரும், திருமானூர் பகுதியில் 35 ஆயிரம் ஏக்கரும் என சம்பா சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

## நஞ்சை விளை நிலங்களை தவிர்த்து தரிசு நிலங்களிலேயே தொழிற்சாலைகளை தொடங்கவேண்டும் ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

“நஞ்சை விளை நிலங்களை தவிர்த்து கூடுமான வரையில் தரிசு நிலங்களிலேயே தொழிற்சாலைகளை தொடங்கவேண்டும்” என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.‘தினத்தந்தி’ நிருபருக்கு சிறப்பு பேட்டி அளித்தார். அப்போது நிருபர் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

உலக முதலீட்டாளர்கள் மாநாடு

கேள்வி:- கடந்த செப்டம்பர் மாதம் 9, 10-ந்தேதிகளில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 2 லட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டது. இந்த மாநாட்டின் தொடர் நடவடிக்கையாக என்னவெல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளது?

பதில்:- இந்த முதலீடுகளை ஈர்த்ததோடு மட்டும் அல்லாமல், மொத்தம் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின, 4 லட்சத்து 70 ஆயிரத்து 65 பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான முதலீடுகள் இவை. மாநாட்டின் நிறைவுநாள் உரையிலேயே முதல்-அமைச்சர் ஜெயலலிதா இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எல்லாவற்றிற்கும் உரிய தொழில்களை தொடங்குவதற்கான அனுமதி விண்ணப்பித்து ஒரு மாதத்திற்குள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

தகவல் பரிமாற்றம்

அன்றே முதல்-அமைச்சர் இந்த ஒரு மாத காலத்திற்குள் அனைத்து ஒப்புதல்களை வழங்க உயர் அதிகாரிகள் கொண்ட ஒரு குழு அமைப்பேன் என்றார். மாநாடு முடிந்த அடுத்த நாளே முதல்-அமைச்சர் தொடர் நடவடிக்கையாக என்னென்ன நடவடிக்கைகளை துறைகள் ரீதியாக மேற்கொள்ளவேண்டும் என்று ஒரு முழுமையான திட்டம் வகுத்து தந்தார்.

அவர் சொன்னது போலவே ஒவ்வொரு வகையான தொழில்களுக்கும் ஒவ்வொரு அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரிகள் குழு, தொழில் முனைவோர் தங்கள் நாடுகளுக்கு செல்லும் முன்பு இ-மெயிலில் தொடர்புகொண்டு தேவையான தகவல்களை சேகரித்து வந்தார்கள். இரு தரப்பினரிடையே தகவல் பரிமாற்றம் அடைந்து, இப்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

பொங்கலுக்குள் பணிகள் தொடங்கும்

ஒரே மாதத்தில், ஒற்றை சாளர முறையில், அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு ஏற்ற முறையில், ஒவ்வொரு நிறுவனம் வாரியாக விவரங்கள் திரட்டப்பட்டு உள்ளன. ஒவ்வொரு நிறுவனம் வாரியாக என்னென்ன ஒப்புதலுக்கு விவரங்களை அனுப்பி உள்ளீர்கள்? அரசிடம் இருந்து உங்களுக்கு என்னென்ன உதவிகள் வேண்டும்? என்று கேட்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த பணிகள் நிறைவடைந்த உடன், முதல்-அமைச்சர் சொன்னது போல் ஒரே மாதத்திற்குள் ஒப்புதல் வழங்குவதற்கு தொழில்துறை அதிகாரிகள் தவிர மற்ற துறையின் 15 செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இந்த உயர்மட்டக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். அநேகமாக பொங்கலுக்குள் பல நிறுவனங்களுக்கு அரசு முழுமையான அனுமதியை வழங்கி, அவர்களும் பணியை தொடங்கி விடுவார்கள்.

நஞ்சை விளை நிலங்கள்

கேள்வி:- புதிய தொழில்களுக்காக 42 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை மேம்படுத்தி கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த 42 ஆயிரம் ஏக்கர் நிலம் அரசு நிலமா? தனியாரிடம் இருந்து கையகப்படுத்த போகிறீர்களா? தரிசு நிலமா? அல்லது விளை நிலமா?

பதில்:- இதில் தனியார் நிலமும், அரசு நிலமும் அடங்கும். கூடுமான வரையில் தரிசு நிலங்களையே தொழில் தொடங்க பயன்படுத்தவேண்டும் என்று முதல்-அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். ஒரு வேளை தவிர்க்க முடியாத பட்சத்தில் நஞ்சை விளைநிலங்களை எடுக்க வேண்டிய அவசியம் வந்தால் ஒரு ஏக்கர் நிலம் என்றாலும், முதல்-அமைச்சரின் ஒப்புதல் பெற்றுதான் அனுமதி வழங்கவேண்டும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா திட்டவட்டமாக இருக்கிறார். ஆகையால் கூடுமான வரையில் தரிசு நிலங்களையே பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

தொழில் பெருவழிச்சால

கேள்வி:- பொதுவாக சென்னையை சுற்றியே தொழில்கள் அமையும் நிலையை தவிர்த்து, தென் மாவட்டங்களில் தொழில் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

பதில்:- தென் மாவட்டங்களில், தொழில் தொடங்குவதற்கு போதுமான வசதிகளை உருவாக்கும் நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா பிறப்பித்த உத்தரவுக்கு ஏற்ப ஆங்காங்கு இதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன. தென் மாவட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்க, ஏற்கனவே அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதே போல தென் மாவட்டங்களில், சிறப்பு திட்டமாக மதுரை-தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலை உருவாக்கும் பணிகள் நடந்து வருகிறது.

மின்சாரம் சப்ளை

கேள்வி:- இவ்வளவு தொழில்களுக்கும் தேவையான மின்சாரம் சப்ளை செய்ய முடியுமா?

பதில்:- நிச்சயமாக முடியும். புதிய மின் திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கும் வேளையில் தொழில்களுக்கு தேவையான மின்சாரம் வழங்குவது என்பது நிச்சயமாக சாத்தியமாகும்.இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

**வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்ததால் தமிழ்நாடு முழுவதும் பரவலாக பலத்த மழை தூத்துக்குடிக்கு விமான சேவை பாதிப்பு**



சென்னை,

தமிழகத்தில் தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழையால் தமிழகம் முழுவதும் நேற்று பரவலாக பலத்த மழை பெய்தது. இந்த மழையால் தூத்துக்குடி-சென்னை விமான சேவையில் பாதிப்பு அடைந்தது.

பருவமழை தீவிரமானது

தமிழகத்தில் தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழையால் கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் பரவலாக பலத்த மழைபொழிவை கொடுத்து வருகிறது. சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் நேற்று நல்ல மழை பெய்தது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடைமருதூர், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, தஞ்சை, கல்லணை, அம்மாப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு 1 லட்சத்து 38 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் மழையாலும் மேட்டூர் அணையின் நீரைக்கொண்டும் நெல் சாகுபடியை முழுமையாக செய்ய முடியும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். நாகை, திருவாரூர் மாவட்டத்திலும் நேற்று மழை பெய்தது.

திண்டுக்கல் -தேனி

மாவட்டம் பழனி, வேடசந்தூர், சத்திரப்பட்டி, நிலக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. கொடைக்கானலில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நேற்று அதிகாலை 6 மணி வரை மழை பெய்தது. இதனால் கொடைக்கானல் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை காரணமாக முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

திருச்சி-புதுக்கோட்டை

திருச்சி மாவட்டதில் நேற்று விட்டுவிட்டு லேசாக மழை பெய்தது. கரூரில் நேற்று சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் கரூர் இந்திரா நகர் பகுதியை சேர்ந்த 39 ஓட்டு வீடுகள் சேதம் அடைந்தன.

அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் நேற்று பல்வேறு இடங்களில் லேசான மழை பெய்தது.

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. வேலூர் மற்றும் சுற்றுப்புறங்களில் நேற்று மாலையில் லேசான மழை பெய்தது.

சேலம்- நாமக்கல்

சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மிதமான மழை பெய்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், ஓசூர் உள்பட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

தர்மபுரி மாவட்டத்தில் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம், மொரப்பூர், தொப்பூர், ஏரியூர், ஒகேனக்கல் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதல் மாலை வரை பரவலாக மழை பெய்தது.

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், மோகனூர் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பெய்தது. கடலூர் மாவட்டத்தில் நேற்று லேசான மழை பெய்தது.

மதுரை-ராமநாதபுரம்

மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் நேற்று காலை முதலே வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. அதிகாலை முதல் பல இடங்களில் தூறலுடன் தொடங்கி பலத்த மழை பெய்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமநாதபுரம், ராமேசுவரம், பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் உள்பட மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

நெல்லை-தூத்துக்குடி

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழையால் பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. குற்றாலம் பகுதியிலும் பலத்த மழை பெய்து வருவதால் அருவிகளில் ஆர்ப்பரித்து தண்ணீர் கொட்டுகிறது.

நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை, சிவகிரி, ஆலங்குளம், சங்கரன்கோவில், நாங்குநேரி, ராதாபுரம், தென்காசி, சேரன்மாதேவி, அம்பை, மணிமுத்தாறு, செங்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

தூத்துக்குடியில் நேற்று அதிகாலையில் இருந்து விட்டுவிட்டு மழை பெய்தது. மேலும் மாவட்டத்தில் திருச்செந்தூர், காயல்பட்டினம், கயத்தாறு, கடம்பூர், சாத்தான்குளம், ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழை பெய்தது.

தூத்துக்குடிக்கு விமான சேவை பாதிப்பு

நேற்று அதிகாலையில் இருந்து மழை பெய்ததால் வானம் கடும் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று காலையில் சென்னையில் இருந்து புறப்பட்ட விமானம் தூத்துக்குடிக்கு வந்தது. ஆனால் மேகமூட்டம் அதிகமாக இருந்ததால் விமானம் தூத்துக்குடியில் தரையிறங்க முடியவில்லை.

இதனால் அந்த விமானம் மதுரைக்கு திருப்பி விடப்பட்டது. அந்த விமானத்தில் வந்த 71 பேருக்கும் வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, தூத்துக்குடிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதேபோன்று தூத்துக்குடியில் இருந்து சென்னை செல்ல தயாராக இருந்த 55 பயணிகளும் மதுரைக்கு அழைத்து செல்லப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் சென்னை சென்றனர்.

கன்னியாகுமரி

குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் உள்பட மாவட்டம் முழுவதும் நேற்று காலையில் லேசான தூறலுடன் தொடங்கிய மழை பின்னர் இடி-மின்னலுடன் பலத்த மழையாக பெய்தது. ஆரல்வாய்மொழி அருகே உள்ள தாழக்குடி பகுதியில் விவசாயி ஒருவர் மின்னல் தாக்கி உடல் கருகினார்.

புதுவையில் நேற்று விட்டுவிட்டு லேசாக சாரல் மழை பெய்தது.

மலை ரெயில் 2 மணி நேரம் தாமதம்நீலகிரி மாவட்டத்தில் பெய்த பலத்த மழைகாரணமாக ஊட்டி மலை ரெயில் பாதையில் கல்லாறு-அடர்லி ரெயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாளத்தில் ராட்சத மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுந்தது.

அப்போது சுற்றுலா பயணிகளுடன் கல்லாறு ரெயில் நிலையத்துக்கு மலை ரெயில் காலை 7.35 மணிக்கு வந்தது. தண்டவாளத்தில் மரம் விழுந்ததால் அந்த ரெயில் அங்கேயே நிறுத்தப்பட்டது. தண்டவாளத்தின் குறுக்கே கிடந்த மரத்தை அப்புறப்படுத்திய பின்னர் 2 மணி நேரம் தாமதமாக மலை ரெயில் புறப்பட்டு சென்றது.

**மழை காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது**



பொள்ளாச்சி,

மழை காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது.

<u>வாழைத்தார் ஏலம்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள்.

இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி சென்று விற்பனை செய்கிறார்கள். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது.

<u>வரத்து குறைந்தது</u>

ஏலத்துக்கு மொத்தம் 1000 வாழைத்தார்களே விற்பனைக்கு வந்தன. இதில் செவ்வாழை ரூ.200 முதல் ரூ.800 வரைக்கும், பூவந்தார் ரூ.100 முதல் ரூ.400 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.150 முதல் ரூ.450 வரைக்கும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.300 வரையும், ரஸ்தாளி ரூ.100 முதல் ரூ.300

வரையும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.18–க்கும், கதளி ஒரு கிலோ ரூ.20–க்கும் ஏலம் சென்றது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:– பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாரந்தோறும் 1,500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வரும். ஆனால் தற்போது மழை பெய்து வருவதால் 1000 தார்களே ஏலத்துக்கு வந்தன.

மேலும், கடந்த வார விலையிலேயே தார்கள் ஏலம் சென்றன.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## ஆனைமலையில் 200 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் அதிகாரிகள் தகவல்



ஆனைமலை,

ஆனைமலை கொள்முதல் நிலையத்தில் 200 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>விவசாயிகள் கோரிக்கை</u>

ஆனைமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு காய்கறி மற்றும் வாழைகள் அதிகளவில் பயிரிடப்பட்டு உள்ளன. இதேபோல் ஆனைமலை பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இருபோகம்

நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் சம்பா பயிர் அறுவடைக்கு தயாரானது. இதனை தொடர்ந்து ஆனைமலையில் நேரடி நெல்கொள்முதல் மையம் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் நெல் கொள்முதல் திறக்கப்படவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த விவசாயிகள் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பொள்ளாச்சி சப்–கலெக்டர் அலுவலகத்தில் அறுவடை செய்த நெல்லை கொட்டி போராட்டம் நடத்தினர்.

200 மெட்ரிக் டன் கொள்முதல்

இதனைதொடர்ந்து ஆனைமலை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் நெல்கொள்முதல் மையம் திறக்கப்பட்டது. இந்த மையத்தில் 200 மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. இதுகுறித்து கொள்முதல் மைய அதிகாரிகள் கூறியதாவது:– விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக தமிழக அரசு சார்பில் ஆனைமலையில் நெல்கொள்முதல் மையம் திறக்கப்பட்டு உள்ளது.

இங்கு கடந்த 15 நாட்களில் 200 மெட்ரிக் டன் நெல் விவசாயிகளிடம் இருந்து அரசு நிர்ணயித்த விலையில் வாங்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

### ஈரோடு–மொடக்குறிச்சியில் இடி–மின்னலுடன் பலத்த மழை



ஈரோடு,

ஈரோடு, மொடக்குறிச்சியில் நேற்று இடி–மின்னலுடன் பலத்த மழைபெய்தது. மணியாச்சிப்பள்ளம் ஓடையில் ஓடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

<u>பலத்த மழை</u>

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் தமிழகம் முழுவதும் பரவலாக மழைபெய்து வருகிறது. இதேபோல் ஈரோடு மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் ஈரோட்டில் நேற்றுக்காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து காலை 10 மணி அளவில் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சிறிது நேரத்தில் பலத்த மழையாக மாறியது. சுமார் ஒரு மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது.

ஏற்கனவே மழை பெய்து பூமி குளிர்ந்துள்ளதாலும், நேற்று பெய்த கனமழை காரணமாகவும் ரோடுகளில் மழைவெள்ளம் அதிக அளவில் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் பல இடங்களில் சாக்கடை கழிவுநீர், மழைவெள்ளத்துடன் கலந்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றது.

ஈரோடு மாநகரில் பல இடங்களில் பாதாள சாக்கடை பணிகள் நடந்து வருவதால், வீதிகள் முழுவதிலும் சேறும், சகதியுமாக காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் வீதிகளில் செல்ல மிகவும் சிரமப்பட்டனர்.

<u>பர்கூர் மலைப்பகுதி</u>

அந்தியூர் அருகே உள்ள பர்கூர் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக மழை விட்டு விட்டு பெய்து வந்தது. இந்த நிலையில் பர்கூர் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு பலத்த மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை இரவு முழுவதும் பெய்தது. இதனால் தாமரைக்கரை, ஈரெட்டி, தேவர்மலை, ஒந்தனை, கொங்காடை,

தட்டங்கரை, தாளக்கரை உள்பட பல்வேறு கிராமங்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

மணியாச்சி பள்ளம் அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மேலும் மணியாச்சி பள்ளம் காட்டாற்று ஓடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மழைநீர் கரைபுரண்டு ஓடியது. இந்த மழையின் காரணமாக ஈரெட்டி பகுதியில் ஆங்காங்கே திடீர் அருவிகள் ஏற்பட்டு மழைநீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

மொடக்குறிச்சி

மொடக்குறிச்சியில் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலை 9 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. இதைத்தொடர்ந்து பகல் 11 மணி வரை இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதன்பின்னர் லேசாக தூறிக்கொண்டே இருந்தது. இதேபோல் எழுமாத்தூர், கணபதிபாளையம், நஞ்சைஊத்துக்குளி, லக்காபுரம் ஆகிய பகுதிகளிலும் நேற்று காலை 9 மணி முதல் 11 மணி வரை மழை கொட்டியது. இதனால் அந்த பகுதியில் உள்ள தடுப்பணைகள் நிரம்பி வழிகிறது.

மழை அளவு

ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

சென்னிமலை –122

பெருந்துறை –57

ஈரோடு –40

பவானி 28.4

மொடக்குறிச்சி –24

கோபிசெட்டிபாளையம் –19.2

குண்டேரிப்பள்ளம் –17.2

அந்தியூர் –15

கொடிவேரி –15

கவுந்தப்பாடி –15

நம்பியூர் –13.5

சத்தியமங்கலம் –10.8

அம்மாபேட்டை –9.6

பவானிசாகர் –7.2

கொடுமுடி –1.4

ஈரோடு மாவட்டத்தில் அதிகபட்சமாக சென்னிமலையில் 122 மில்லி மீட்டர் மழை அளவும், குறைந்தபட்சமாக கொடுமுடியில் 1.4 மில்லி மீட்டர் மழை அளவும் பதிவாகி உள்ளது.

## கல்லாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தல்




பெரம்பலூர்,

மலையாளப்பட்டி அருகே கல்லாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடந்தது. கூட்டத்தில் வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளை முன்வைத்து பேசினர்.

அதன் விவரம் வருமாறு;–

தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ஆர்.ராஜாசிதம்பரம்:– பெரம்பலூர் மாவட்டத்தில் ஏரிகளில் உள்ள வண்டல் மண்ணை வயல் நிலங்களுக்காக அள்ளுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும். லாடபுரத்தில் இருந்து குரும்பலூர், பெரம்பலூர், துறைமங்கலம் வரையிலான ஏரிகளுக்கு நீர்வரத்து வாய்க்கால்களை தூர்வாரி சீரமைக்க வேண்டும்.

அணை கட்ட வேண்டும்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் செல்லதுரை பேசியதாவது;– கொட்டரை ஊராட்சியில் மருதையாற்றின் குறுக்கே ரூ.108 கோடி மதிப்பில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்ட கட்டுமான பணிகளை உடனே தொடங்கவேண்டும். வெள்ளனூர் கிராமத்தில் உடைந்து கீழே விழும் நிலையில் உள்ள மின்கம்பங்களை அகற்றி புதிய கம்பங்களை அமைக்க வேண்டும். விவசாய நிலங்களை சேதப்படுத்தும் மயில்களை கட்டுப்படுத்திட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவள்ளுவர் உழவர் மன்றத்தலைவர் பூலாம்பாடி வரதராசன்:– வேப்பந்தட்டை தாலுகா மலையாளப்பட்டி அருகே பச்சைமலை அடிவாரத்தில் சின்னமுட்டுலு அருகே கல்லாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் 1952–ல் உருவாக்கப்பட்டு 1973–ல் மீண்டும் மறு உருவாக்கம் செய்யப்பட்டு கோப்புகள் கிடப்பில் போடப்பட்டது. 2005–

06 நிதி ஆண்டில் தமிழக அரசு இந்த திட்டத்தை மறுமதிப்பீடு செய்து பொதுமக்களின் கருத்து கேட்ட நிலையில் நீர்த்தேக்க திட்டம் கைவிடப்பட்டதாக அறிவித்துவிட்டது. வேப்பந்தட்டை தாலுகா விவசாயிகளின் 63 ஆண்டுகால கனவு திட்டமாகவே உள்ளது. 2500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் இந்த திட்டத்தை போர்க்கால அடிப்படையில் உடனே நிறைவேற்றவேண்டும்.

நிவாரண நிதி

விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட அமைப்பாளர் ரமேஷ்:– குரும்பலூர் பேரூராட்சியில் வெறிநாய் கடித்து உயிரிழந்த பசுமாடுகளின் உரிமையாளர்களுக்கு தமிழக அரசு நிவாரண நிதி வழங்க வேண்டும். வேளாண்மை துறையில் காலியாக உள்ள பணி இடங்களை விரைந்து நிரப்ப வேண்டும். அரசு பஸ்களில் பஸ் பாஸ் வைத்துள்ள மாணவ–மாணவிகளை ஏற்றிச்செல்லாத கண்டக்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஓய்வுபெற்ற கூட்டுறவு வங்கி அதிகாரி வேணுகோபால்:– பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஓமியோபதி மற்றும் இயற்கை மருத்துவ பிரிவை தொடங்கி மருத்துவர்களை பணி நியமனம் செய்ய வேண்டும். திருமாந்துறை அருகே சிறப்பு பொருளாதார திட்டத்தை மத்திய அரசு விரைந்து செயல்படுத்தவேண்டும்.

மேலும் பல்வேறு விவசாய சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

## தஞ்சை மாவட்டத்தில் மழை நீடிப்பு அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 42 மி.மீட்டர் பதிவானது



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் மழை நீடித்து வருகிறது. அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 42 மி.மீட்டர் பதிவானது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக காவிரிடெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்றுகாலையில் மழை பெய்யவில்லை. திடீரென சில நிமிடம் மழை தூறுவதும், பின்னர் நிற்பதுமாக இருந்தது. பிற்பகலில் வெயில் அடித்தது. பிற்பகல் 2.15 மணி அளவில் திடீரென பலத்த மழை பெய்தது. இந்த மழை 5 நிமிடம் தான் நீடித்தது. பின்னர் மழை பெய்யவில்லை. ஆனால் கருமேகங்கள் திரண்டு வருவதும், கலைந்து செல்வதுமாக இருந்தது.

தற்போது பெய்து வரும் மழையால் சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு 1 லட்சத்து 38 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பில் சம்பா,

தாளடி நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு நடவு பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. தற்போது பெய்து வரும் மழை தண்ணீரை கொண்டும், மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரை கொண்டும் சம்பா, தாளடி நெல் சாகுபடியை முழுமையாக செய்ய முடியும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

<u>மழைஅளவு</u>

தஞ்சை மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 42 மில்லிமீட்டர் மழையும், குறைந்தபட்சமாக திருக்காட்டுப்பள்ளியில் 3.2 மில்லிமீட்டரும் மழையும் பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:–

கும்பகோணம்–14, பாபநாசம்–15.4, தஞ்சை–10, திருவையாறு–5, திருக்காட்டுப்பள்ளி–3.2, வல்லம்–24, கல்லணை–3.6, அம்மாப்பேட்டை–11, திருவிடைமருதூர்–42, மஞ்சலாறு–16, நெய்வாசல்தென்பாதி–39, பூதலூர்–4.6, வெட்டிக்காடு–16.4, ஈச்சன்விடுதி–4.2, ஒரத்தநாடு–15.5, மதுக்கூர்–5, பேராவூரணி–5, அணைக்கரை–27.6, குருங்குளம்–16.

தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 277.5 மில்லிமீட்டர் மழை பெய்து இருந்தது. சராசரி மழைஅளவு 13.21 மில்லிமீட்டர் ஆகும். தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 571.55 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு 587.18 மில்லிமீட்டர் மழை பெய்து இருந்தது.

## கம்பம் பகுதியில் 2–ம்போக விவசாயத்திற்கு எந்திர நெல் நடவு விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் மானியம்



கம்பம்,

கம்பம் பகுதியில் எந்திர நெல் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது என்று தேனி மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

நெல் நடவு பணிகள்

தேனி மாவட்டம் கம்பம் வட்டார பகுதியில் முதல்போக நெல் அறுவடைப்பணிகள் முடிந்து தற்போது 2–ம் போக விவசாயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி பெருக்குத் திட்டத்தின் கீழ் கம்பம், காமயகவுண்டன்பட்டி, ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம், கூடலூர் மற்றும் சுருளிப்பட்டி ஆகிய பகுதிகளில் எந்திர நடவு மேற்கொள்வதற்கு நாற்றங்கால் அமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

எந்திர நடவுக்காக பாய் நாற்றாங்கால் மற்றும் குழித்தட்டு நாற்றாங்கால் அமைக்கப்பட்டு வருகிறது. இதனை தேனி மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் வெங்கிட சுப்ரமணியன் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

ரூ.3 ஆயிரம் மானியம்

இதுகுறித்து வேளாண்மைத்துறை இணை இயக்குனர் கூறியதாவது:–

சாதாரண நடவு முறையில் 8 செண்ட் அளவுக்கு நாற்றங்கால் அமைக்க வேண்டும். ஆனால் எந்திர நடவு மேற்கொள்ளும் போது ஏக்கருக்கு ஒரு செண்ட் நாற்றங்கால் போதுமானது. எந்திர நடவு மேற்கொள்ளும் பயிர்

இடைவெளி 22.5 செ.மீ என்ற அளவில் சரியாக கடைபிடிக்கப்படும். இதனால் காற்றோட்டம் அதிகரிக்கும். மேலும் எந்திரம் மூலம் களை எடுக்க ஏதுவாக இருக்கம்.

சரியான பயிர் இடைவெளி, எந்திரம் பயன்படுத்துதல் மூலம் தூர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். எந்திர நடவு மேற்கொள்வதால் ஏக்கருக்கு 500 கிலோ வரை அதிகமாக மகசூல் கிடைக்கும். விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ள இத்தருணத்தில் நெல் விவசாயிகள் எந்திர நடவு முறையினை மேற்கொண்டு பயனடைய வேண்டும்.

மேலும் எந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயனடைய விவசாயிகள் வயல் சிட்டா நகல், ஆதார் எண், வங்கி கணக்கு புத்தக நகல் ஆகிய ஆவணங்களை அந்தந்தப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் ஒப்படைப்பு செய்து பயன்பெறலாம். மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவருடன் கம்பம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர்அசோகன் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1½ அடி உயர்வு**



கூடலூர்

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1½ அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குடிநீர் ஆதாரம்

தேனி மாவட்டத்தின் பாசனம் மற்றும் குடிநீர் ஆதாரமாக முல்லைப்பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணையின் மூலம் பாசன வசதி பெறும் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல்போக நெல் அறுவடைப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும் கூடலூர், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை முடிந்து 2-ம் போக சாகுபடிக்கு நாற்றங்கால் அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை ஓரளவு பெய்து முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. இதன் எதிரொலியாக முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் பிரச்சினை ஏற்படவில்லை.

தொடர் மழை

அதே நேரத்தில் 2-ம் போக நெல் சாகுபடிக்கு வடகிழக்கு பருவமழை கைகொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். இதனால் அணையின் நீர்மட்டம் உயருமா? 2-ம் போக நெல் சாகுபடி முழுமை பெறுமா? என்ற குழப்பத்தில் இருந்த விவசாயிகளுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் வகையில் கடந்த 2 நாட்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக கடந்த 29-ந் தேதி 119.30 அடியாக காணப்பட்ட அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 120.90 அடியாக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் நீர்மட்டம் 1½ அடி உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 933 கன அடியாக காணப்பட்டது. நேற்று வினாடிக்கு 3 ஆயிரத்து 619 அடியாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 511 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 2 ஆயிரத்து 806 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

நேற்று முன்தினம் பெரியாறு அணைப்பகுதியில் 3 மி.மீ., தேக்கடியில் 0.4 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உடுமலை உழவர் சந்தையில் கடந்த மாதம் ரூ.1 கோடியே 39 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை



உடுமலை,

உடுமலை உழவர் சந்தையில் கடந்த மாதம் ரூ.1கோடியே 39 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனையானது.

உழவர் சந்தை

உடுமலை கபூர்கான் வீதியில் உள்ள உழவர் சந்தைக்கு கடந்த அக்டோபர் மாதம் 6 லட்சத்து 75 ஆயிரத்து 615 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு வந்திருந்தது. 2 ஆயிரத்து 300 விவசாயிகள் கொண்டு வந்திருந்த இந்த காய்கறிகள் மொத்தம் ரூ.1 கோடியே 39 லட்சத்து 62 ஆயிரத்து 740–க்கு விற்பனையானது. காய்கறிகளை 96 ஆயிரத்து 509 நுகர்வோர்கள் வாங்கி பயன் அடைந்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 2 ஆயிரத்து 205 விவசாயிகள் கொண்டு வந்த 6 லட்சத்து 99 ஆயிரத்து 285 கிலோ காய்கறிகள் ரூ.1 கோடியே 31 லட்சத்து 22 ஆயிரத்து 890–க்கு விற்பனையாகியிருந்தது. கடந்த செப்டம்பர் மாதத்தை விட அக்டோபர் மாதம் காய்கறிகளின்வரத்து 23 ஆயிரத்து 670 கிலோ குறைவாக இருந்தது. அதேசமயம் காய்கறிகளின் விலையும் அக்டோபர் மாதம் அதிகமாக இருந்தது. அதனால் காய்கறிகளின் விற்பனை தொகை ரூ.8 லட்சத்து 39 ஆயிரத்து 850 கூடுதலாக இருந்தது.

பெரிய வெங்காயம்

உழவர்சந்தையில் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.18 முதல் 20 வரைக்கும், கத்தரிக்காய் ரூ.16 முதல் ரூ.20 வரைக்கும், வெண்டைக்காய் ரூ.28 முதல்

ரூ.30 வரைக்கும், அவரைக்காய் ரூ.26 முதல் ரூ.28 வரைக்கும், பீர்க்கங்காய் ரூ.20 முதல் ரூ.24 வரைக்கும், பாகற்காய் ரூ.20 முதல் ரூ.25 வரைக்கும், சம்பா பச்சை மிளகாய் ரூ.16 முதல் ரூ.18வரைக்கும், குண்டு பச்சை மிளகாய் ரூ.20 முதல் ரூ.22 வரைக்கும் விற்பனையானது.

சின்ன வெங்காயம் ரூ.38 முதல் ரூ.48 வரைக்கும், பெரிய வெங்காயம் ரூ.38 முதல் ரூ.46 வரைக்கும் விற்பனையானது. மேலும் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.30 முதல் ரூ.36 வரைக்கும், உருளைக்கிழங்கு ரூ.16 முதல் ரூ.20 வரைக்கும். கேரட் ரூ.32 முதல் ரூ.36 வரைக்கும், முள்ளங்கி ரூ.12 முதல் ரூ.14 வரைக்கும், பீட்ரூட் ரூ.8 முதல் ரூ.10 வரைக்கும் விற்பனையானது. நேற்று விடுமுறை தினம் என்பதால் மக்கள் கூட்டமும் அதிகளவில் இருந்தது.

தினகரன்

**மெர்க்கன்டைல் வங்கி சார்பில் விவசாயிகளுக்கு கடன் வழங்கல்**

திருச்சி, : தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி திருச்சி மண்டல அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம் நடைபெற்றது. முகாமுக்குத் தலைமை வகித்த வங்கியின் வேளாண் பிரிவு துணை பொதுமேலாளர் செல்வராஜ், விவசாயிகளுக்கு கடன்களுக்கான ஆணையை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், 10 மாவட்டங்களை உள்ளடக்கிய திருச்சி மண்டலத்தில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சார்பில் 44 கிளைகள் இயங்கி வருகின்றன. இவ்வங்கிக் கிளைகள் அனைத்திலும் விவசாயிகளுக்கு நகைக் கடன்கள் வழங்கப்படுவதோடு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏற்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசின் முத்ரா, சிசு, தருண் ஆகிய திட்டங்களின் கீழ் பல்வேறு பயன்பாடு வழங்கப்பட்டு வருகிறது என்றார். முகாமில் மத்திய

அரசின் பூமி கிசான் திட்டத்தின் கீழ் 50 குழுமங்களைச் சேர்ந்த 250 பயனாளிகளுக்கு வேளாண் கடன் வழங்கப்பட்டது. மொத்தம் 297 பேருக்கு ரூ.6.93 கோடி மதிப்பீட்டிலான கடனுதவி வழங்கப்பட்டது. முகாமில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்ற நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சுரேஷ்குமார், முன்னோடி வங்கி மேலாளர் பிரபாகரன் ஆகியோர் அரசு சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசினர். முன்னதாக திருச்சி மண்டல மேலாளர் நரேந்திரன் வரவேற்றார். முடிவில் வங்கியின் முதன்மை அதிகாரி அசோக் ராமதாஸ் நன்றி கூறினார்.

**சம்பா சாகுபடி மேற்கொள்ள புள்ளம்பாடி வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

அரியலூர், : சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக புள்ளம்பாடி வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்துவிட துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரியலூரில் நேற்று நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் அரியலூரில் உள்ள கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. கூட்டம் துவங்கியதும், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மறைவுக்கு கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் அதிகாரிகளும், விவசாயிகளும் எழுந்து நின்று 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது: அரியலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் இம்மாதம் வரை 297 மி.மீ. வரை மழை பெய்துள்ளது. இது மானாவாரி பயிர்களான கடலை, உளுந்து, மக்காச்சோளம், கம்பு, சோளம் ஆகியவற்றை பயிரிட ஏற்றத் தருணமாகும். இவ்வகை பயிர்களுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானியத்தில் வழங்கப்படும் உதவிகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் பிச்சைப் பிள்ளை: மாவட்டத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரி,

குளங்களில் எத்தனை ஏரிகள் தூர்வாரப்பட்டுள்ளன? அதன் விவரம் குறித்து அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். மேலும், மழை காலத்துக்கு முன்பாக ஏரி, குளங்களைத் தூர்வாரினால் மட்டுமே நீர் ஆதாரத்தையும் விவசாய நிலங்களையும் பாதுகாக்க முடியும். மேலும், சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக புள்ளம்பாடி வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்துவிட துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை ஆலை நிர்வாகத்திடம் பேசி விரைவாக பெற்றுத்தர வேண்டும். அரியலூர், அம்மாகுளம், ரெங்கசமுத்திரம், சுப்பராயபுரம், பொய்யூர் வழியாக சுண்டக்குடிக்கு பஸ் வசதி செய்துதர வேண்டும் என்றார்.

உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் சங்கத் தலைவர் ஜெயச்சந்திரன்:

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மற்றும் வேளாண் அறிவியல் மையம் ஆகியவற்றின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில் கடந்த 17ம் தேதி நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், இயற்கை வேளாண்மையை வலியுறுத்தினார். அதன் படி, கரும்பு விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்க, கரும்பு சக்கையில் இருந்து எத்தனாலை தயாரித்து, அதில் இருந்து மின்சாரத்தை உருவாக்கும் வகையில் 0 சதவீத கழிவற்ற நவீன தொழில்நுட்பத்தை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும். பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மழை நீரை அவற்றில் சேமிக்க வேண்டும். இதனால் விவசாயம் வளம் பெறும் என்று கலாம் வலியுறுத்தினார். எனவே, அவரது ஆலோசனையை ஏற்று எத்தனாலில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் நவீன தொழில்நுட்பத்தை மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப்படுத்த வேண்டும், ஏரிகள் மற்றும் வரத்து வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றார்.

இதைத் தொடர்ந்து, தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் விசுவநாதன் கலெக்டரிடம் கோரிக்கை மனு ஒன்று கொடுத்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது: அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா.பழூர் ஆகிய டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடியை தொடங்க விவசாயிகள் ஆயத்தமாக இருக்கின்றனர். இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணை 100 அடியை எட்டும் நிலையில் இருக்கிறது. 90 அடிக்கு மேல் சென்றாலே சம்பா சாகுபடிக்கு புள்ளம்பாடி வாய்க்காலுக்கு ஆகஸ்ட் 1ம் தேதியில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்ற ஆணை இருக்கிறது. அதன்படி திறந்தால் இந்த வாய்க்கால் மூலம் 23 ஏரிகளில் நீரைத் தேக்கிவைத்து அதன்மூலம் 18 கிராமங்களில் 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நிலங்கள் பயன்பெறும்.

மேட்டூர் அணையில் இருந்து தற்போது தமிழக அரசு இம்மாதம் 9ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படும் என்று அறிவிப்பு வந்தள்ளது என்றாலும் அந்த தண்ணீர் இங்கு வந்து சேருவதற்கு இன்னும் ஒருவார காலமாகும். அதனால் போதிய தண்ணீர் அனைவருக்கும் கிடைக்குமா என்ற சந்தேகம் உள்ளது. கடந்தாண்டைப்போல் இந்த ஆண்டும் உரத்தட்டுப்பாடு இல்லாமல் தமிழக அரசு பார்த்து கொள்ள வேண்டும். தா.பழூர் ஒன்றியத்திற்கு கல்லணையில் இருந்து கொள்ளிடத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். இதன் மூலம் 25 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பயன்பெறும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார். கூட்டத்தில் டிஆர்ஓ ரவீந்திரன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் செங்கமுத்து, அம்பேத்கர் வழியன், விசுவநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஞாயிறுதோறும் கூட்டம்

அரியலூரில் மாவட்ட அளவில் ஒவ்வொரு முறையும் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடைபெற்ற போதும் அரசு அலுவலர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி கூட்டத்துக்கு வராமல் டிமிக்கி கொடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கலெக்டர் சரவணவேல்ராஜ், அடுத்த மாதத்தில் இருந்து விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படும் என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்

**சொட்டுநீர் பாசனத்துக்கு பருத்தி சாகுபடியில் ரூ.85.000 அரசு மானியம்**

அரியலூர், : பருத்தி சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு ரூ.85.000 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது என குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கத்திட்டத்தில் இறவை பருத்தி சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைத்திட ரூ.85 ஆயிரத்து 400 மானியமும் மற்றும் இதர விவசாயிகளுக்கு ரூ.64 ஆயிரத்து 50 மானியமும் ஒரு எக்டருக்கு வழங்கப்படும். மேலும் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உயிர் உரங்கள், களைக்கொல்லி, நுண்சத்து உரம், பயிர் பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது. பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை உரிமம் பெற்ற தனியார் மற்றும் கூட்டுறவு கடன் சங்க விற்பனை மையங்களில் பெற்று அதற்கான ரொக்க ரசீது, அடங்கல் மற்றும் குடும்ப அடையாள அட்டை ஆகியவற்றுடன் அருகிலுள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து, அதற்கான 50% மானியத் தொகையினை பின்னேற்பு மானியாக பெற்று கொள்ளலாம். மேலும் விதைப்பு செய்த 70ம் நாள் நுனி கிள்ளுதல் பணியினை நிறைவு செய்த விவசாயிகள் அதற்கான பின்னேற்பு மானியமாக எக்டருக்கு ரூ. 500 வீதம் பெற்று கொள்ளவும். ரோட்டவேட்டர் என்கிற விசை உழுவை கருவி வாங்கிட சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.55 ஆயிரமும், இதர விவசாயிகளுக்கு ரூ.44 ஆயிரம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்திற்காக

அனைத்து இனங்களுக்கும் ரூ.84.34 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அரியலூர் கலெக்டர் தெரிவித்தார்.

**செட்டிகுளத்தில் அசோலா தீவனப்பயிர் வளர்ப்பு விழிப்புணர்வு**

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் அருகே உள்ள செட்டிகுளம் கிராமத்தில் அசோலா தீவனப்பயிர் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பெரம்பலூ அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வல்லாபுரம் பிரிவு பாததையில் உள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் அனிட்ஜாய், அஞ்சுஜான், இந்துமதி, ஜனனி, கமலக்கன்னி, மரியாலூக், புனிதவதி, ராஹின்ரூபிகா ஆகியோர் சார்பில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அசோலா தீவனப்பயிர் வளர்ப்பு முறைகள் குறித்தும், அதன் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்தனர். மேலும் அசோலா தீவனப்பயிர் சாகுபடி செய்வதற்கு குறைந்த அளவில் தண்ணீர் தேவைபடுகிறது. சிறு, குறு விவசாயிகள் முதல் கால்நடை வளர்ப்புத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளும் இப்பயிரை மிக எளிதில் சாகுபடி செய்யலாம். சாகுபடி செலவு மிக, மிக குறைவு, இப்பயிரை கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கலந்து கொடுக்கலாம். இவ்வாறு கொடுப்பதன் மூலம் கால்நடைகள் மிகவும் ஆரோக்கியத்துடன் அதிக நாள் உயிர் வாழ்ந்து பால் உற்பத்தியை அதிகளவில் வழங்கும், முட்டைகள் எண்ணிக்கை அதிகரிக்கும், மாடு, கோழி மட்டுமல்லாமல் இத்தீவனத்தை ஆடு, முயல், பன்றி, காடை, மீன் போன்றவைகளுக்கும் உணவாக கொடுக்கலாம். நெற்பயிர் வயல்களுக்கு நுண்ணுயிர் உரமாக பயன்படுத்தலாம், ஒரு ஏக்கர் நிலத்தில் 200 கிலோ அசோலாவை பயிரிட வேண்டும். இப்பயிர் 20 முதல் 25 நாட்களுக்குள் நன்கு வளர்ந்து விடும். மேலும் அசோலாவை நுண்ணுயிர் உரமாக பயன்படுத்துவதன் மூலம் 20 முதல் 30 சதவீதம் முதல் உரச்செலவை குறைத்திடலாம், வயல்களில் களைகள் வளர்வது,

நீர் ஆவியாதல் 20 முதல் 25 சதவீதம் குறைந்திடும் என்று அசோலா பயிர் குறித்து பல்வேறு வளிக்கங்களை அளித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி அலுவலர்கள் மணிகண்டன், துரைசாமி ஆகியோர் உட்பட செட்டிகுளம் கிராமத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள், பொது மக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அரியலூரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர், : அரியலூர் கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் விவசாய குறைதீர் கூட்டம் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நேற்று நடைப்பெற்றது. இதில், மாவட்ட விவசாயிகள் சங்கத்தலைவர் செங்கமுத்து பேசியபோது, தமிழகத்தில் பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்கள் விலை அதிகரித்துள்ளது. இந்த விலை ஏற்றத்தால் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் பயனில்லை. இடைத்தரகர்கள்தான் பயனடைகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை அரசே வாங்கினால்தான் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும். பழுதடைந்த அரியலூர் செட்டிஏரி பாலத்தை சீரமைத்து போக்குவரத்தை தொடங்க வேண்டும் என்றார். உழவர் மன்ற விவசாய சங்கத்தலைவர் ஜெயச்சந்திரன் பேசியபோது, ஆண்டிமடம் பகுதிகளில் தமிழக அரசு வழங்கிய விலையில்லா பேன், மிக்ஸி, கிரைண்டர் வழங்கப்பட்டது. அதில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மிக்ஸி போன்ற பொருட்கள் நொறுங்கி சேதமாகி வந்துள்ளது. அதை வைத்து பொதுமக்கள் எப்படி பயன்பெற முடியும் எனவே கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். விவசாய சங்க பிரதிநிதிகள் அம்பேத்கர்வழியன், பிச்சைப்பிள்ளை, ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கோரிக்கை வலியுறுத்தி பேசினர். இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் பன்னீர்செல்வம், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் பாபு உள்ளிட்ட பல்வேறு அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்


**118 நேரடி நிலையங்களில் 33,000 டன் நெல் கொள்முதல்**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் 118 நேரடி நெல் கொள்முதல் நிலையம் வாயிலாக 33 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். தஞ்சையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து பேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு 1,38,500 எக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இதில் 83,210 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 33,625 எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை முடிந்துள்ளது. சம்பா பருவத்துக்கான நாற்றங்கால் 4,850 எக்டேர் பரப்பில் சாதாரண முறையிலும், 410 எக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாற்றங்காலை கொண்டு 89,500 எக்டேர் நடவு மேற்கொள்ளப்படும். நடப்பு சம்பா பருவத்துக்கு 97,000 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்துக்கு தேவையான நெல் ரகங்கள் வேளாண் விரிவாக்க மையம், தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளவுக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் உரங்களும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு என்று 8 தாலுகா மற்றும் சிறப்பு கொள்முதல் குழு என்று 118 நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. இந்த கொள்முதல் நிலையத்தில் கடந்த 26ம் தேதி வரை 33,299 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார். டிஆர்ஓ சந்திரசேகரன், வேளாண் இணை இயக்குனர் ஞானஒளி, நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் மணிமாறன், கூட்டுறவு சங்கங்களின்

மண்டல இணை பதிவாளர் சுப்ரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தினமணி

**பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



கூடலூர்: நீர்பிடிப்பு பகுதிகளில் சில நாட்களாக மழை பெய்து வருவதால் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் வரை வ வினாடிக்கு 933 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 3619 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் நேற்று முன்தினம் 119.50 அடியாக இருந்த அணை நீர்மட்டம் நேற்று காலை 120.50 அடியாக உயர்ந்துள்ளது. அணையிலிருந்து தமிழக பகுதிக்கு வினாடிக்கு 511 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 2,806 மில்லியன் கன அடியாக உள்ளது.

71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 46.78 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 422 கன அடியாகவும், நீர்வெளியேற்றம் வினாடிக்கு 960 கன அடியாகவும் உள்ளது. அணையின் இருப்பு நீர் 1597 மில்லியன் கன அடியாக உள்ளது. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 56.80 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 49 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 49 கன அடியாகவும் உள்ளது. அணையின் இருப்பு நீர் 472.64 மில்லியன் கன அடியாக உள்ளது.

126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 112.99 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 3 கன அடியாகவும், அணையிலிருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 78.73 மில்லியன் கன அடியாக உள்ளது.

**தமிழகத்தில் 24 மணி நேரத்திற்கு மழை நீடிக்கும்: வானிலை மையம் அறிவிப்பு**




சென்னை: தமிழ்நாட்டில் வட கிழக்கு பருவ மழை தொடங்கி மழை பெய்து வருகிறது. வங்க கடலில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டதன்

காரணமாக தற்போது மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக பாபநாசம், ஸ்ரீவைகுண்டத்தில் 10 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

சென்னையில் நேற்று காலை பல்வேறு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்தது. எழும்பூர், தேனாம்பேட்டை, கோயம்பேடு, வடபழனி, அம்பத்தூர், ஆவடி, ஆலந்தூர், கிண்டி, பல்லாவரம், தாம்பரம் உள்பட பல இடங்களில் மழை பெய்தது.இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:–இலங்கை, கன்னியாகுமரி கடல் பகுதியில் நேற்று நிலை கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது. இன்று காலை இது கன்னியாகுமரி கடல் மற்றும் அதையொட்டி உள்ள லட்சத்தீவு பகுதியில் நிலை கொண்டுள்ளது.இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்திற்கு பெரும்பாலான இடங்களில் கன மழை பெய்யும்.கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், தென் மாவட்டங்களிலும் மழை பெய்யும். சில பகுதிகளில் கன மழை எதிர்பார்க்கலாம்.சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்யும்.இவ்வாறு அவர் கூறினார்.நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஸ்ரீவைகுண்டம், பாபநாசம் பகுதியில் 10 செ.மீ. மழை பெய்தது பதிவாகி உள்ளது. தூத்துக்குடியில் 9 செ.மீ., குளச்சலில் 7 செ.மீ., இரணியல், குளித்துறை, தக்கலை, பொன்னேரியில் 6 செ.மீ.பேச்சிப்பாறை, தாம்பரம், பாளையங்கோட்டை, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, கொள்ளிடம் அணை, கன்னியாகுமரி, நாங்குநேரியில் 5 செ.மீ. மழை பெய்துள்ளது.அம்பாசமுத்திரம், தொண்டி, நாகை, திருச்செந்தூர், செம்பரம்பாக்கத்தில் 4 செ.மீ., திருத்துறைப்பூண்டி, முதுகுளத்தூர், மேட்டுப்பாளையம், தாமரைப்பாக்கம், விளாத்திகுளம், பேராவூரணி,

மயிலாடி, செங்கோட்டை, மணிமுத்தாறு 3 செ.மீ.சென்னை விமான நிலையம், ஸ்ரீபெரும்புதூர், சிதம்பரம், சீர்காழி, காரைக்குடி, காரைக்கால், சேரன்மாதேவி, குன்னூரில் 2 செ.மீ., நாகர்கோவில், தென்காசி, மயிலாப்பூர், ரெட்ஹில்ஸ், சாத்தான்குளம் 1 செ.மீ. மழை பெய்தது பதிவாகி உள்ளது.

**முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி குறைந்த விலை பருப்பு விற்பனை தொடங்கியது**



சென்னை: முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் கூட்டுறவு கடைகளில் மலிவு விலையில் துவரம் பருப்பு விற்பனை நேற்று தொடங்கியது.பருப்பு வாங்க ஒவ்வொரு கடையிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.

பருப்பு விலை வெளிச்சந்தையில் உயர்வதை தடுக்க முதல்வர் ஜெயலலிதா மலிவு விலையில் துவரம் பருப்பு விற்பனை திட்டத்தை

அறிவித்தார். இதைத்தொடர்ந்து நவம்பர் 1 ம்தேதி முதல்கூட்டுறவு அங்காடிகளிலும் டி.யூ.சி.எஸ் கடைகளிலும் ஒருகிலோ பருப்பு 110 ரூபாய்க்கு கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் கூட்டுறவு அங்காடிகளில் பருப்பு வாங்க நேற்று காலை 8 மணிக்கே மக்கள் 'கியூ'வில் நின்றார்கள்.ஒவ்வொரு கடையிலும் கூட்டம் அலைமோதியது.துவரம் பருப்பு வாங்குவதற்காக தனி கவுண்டர்கள் அமைக்கப்பட்டிருந்தது.பெண்கள் அதிக அளவில் வந்திருந்தனர்.பருப்பு வாங்கி சென்றவர்களிடம் கியூவில் நின்றவர்கள் அந்த பருப்பை வாங்கி பார்த்தார்கள்.110 ரூபாய்க்கு அருமையான துவரம் பருப்பு கிடைத்துள்ளது. 100 ரூபாய் லாபம் என்று பருப்பை வாங்கி சென்றவர்கள் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

குறைந்த விலையில் துவரம் பருப்பு விற்பனை சென்னை மாநகரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் அண்ணாநகர் மேற்கு, நந்தனம், அசோக்நகர், ஆர்.கே. மடம் ரோடு, இந்திராநகர், சி.பி.ஆர். சாலை, பெரியார் நகர், எம்.எம்.டி.ஏ. காலனி, கோபாலபுரம், அண்ணாநகர் மெயின், தம்பு சாமி ரோடு, அண்ணா நெடும்பாதை, தாம்பரம், கே.கே.நகர் மேற்கு, வி.எம்.தெரு, சாந்தி காலனி, திருவான்மியூர், ஆற்காடு சாலை, ஆவடி மற்றும் போரூர் அமுதம் அங்காடிகள், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தேனாம்பேட்டை, ஆர்.ஏ.புரம், பெசன்ட் நகர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, அசோக்நகர், ராயப்பேட்டை, கீழ்ப்பாக்கம், செனாய் நகர், பெரியார் நகர், மீனம்பாக்கம் மற்றும் துரைப்பாக்கம் சுயசேவைப் பிரிவு விற்பனை நிலையங்கள், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அண்ணா நகர், செனாய் நகர் மற்றும் அரும்பாக்கம் விற்பனை நிலையங்கள், வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கொடுங்கையூர், பிராட்வே, மணலி மற்றும்

எம்.ஆர்.எப். அங்காடிகள், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலையின் ராயபுரம் மற்றும் பெரியார் நகர் அங்காடிகள், மாம்பலம் தொடக்க கூட்டுறவு பண்டகசாலையின் மேற்கு மாம்பலம் அங்காடி, அடையார் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையின் அடையாறு அங்காடி, கஸ்தூரிபாய் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையின் ஆதம்பாக்கம் அங்காடி, சென்னையில் செயல்படும் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளான ஜார்ஜ்டவுன் (சவுகார்பேட்டை), பாரதியார் (புதிய வண்ணாரப்பேட்டை), தட்டான்குளம் (சூளை), ஐ.சி.எப்., தண்டையார் நகர் (தண்டையார் பேட்டை), வியாசர்பாடி ஆகிய விற்பனை நிலையங்களிலும், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நந்தம்பாக்கம், போரூர், மடிப்பாக்கம், தாம்பரம், செம்பாக்கம் மற்றும் குரோம்பேட்டை விற்பனை நிலையங்கள் ஆகிய 56 இடங்களிலும்,

கோயம்புத்தூர் மாநகரில், கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கோவை வடக்கு, நூலக கட்டடம் மற்றும் எஸ்.பி. காலனி அங்காடிகள், வேலாண்டிபாளையம் நகர கூட்டுறவு கடன் சங்க வேலாண்டிபாளையம் அங்காடி, சிங்காநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்க சிங்காநல்லூர் அங்காடி, எஸ்.ஆர்.எஸ். கூட்டுறவு பண்டகசாலையின் பூ மார்க்கெட் விற்பனை நிலையம், பாப்பநாய்க்கன் புதூர் கூட்டுறவு பண்டகசாலையின் பி.பி.புதூர் அங்காடி, தமிழ்நாடு மாநில போக்குவரத்து தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையின் சேரன் நகர் அங்காடி, குனியமுத்தூர் கூட்டுறவு பண்டக சாலையின் குனியமுத்தூர் அங்காடி, கோயம்புத்தூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க ஆர்.எஸ்.புரம் அங்காடி ஆகிய 10 விற்பனை அங்காடிகளிலும்,

திருச்சி மாநகரத்தில் திருச்சி சிந்தாமணியின் புதூர், என்.எஸ்.பி., சாலை, கைலாசபுரம் மற்றும் ஸ்ரீரங்கம் அங்காடிகள், திருச்சி அமராவதியின் பழைய சரக்கு வாகன சாலை கைலாசபுரம், பொன்மலை, சுப்பிரமணியபுரம் மற்றும் ஸ்ரீநிவாச நகர் அங்காடிகள், ஸ்ரீரெங்கநாத தொடக்க கூட்டுறவு பண்டகசாலையின் ஸ்ரீரங்கம் அங்காடி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் கூட்டுறவு சங்கத்தின் மங்கம்மாள் சாலை அங்காடி, தென்சென்னை மின்வாரிய ஊழியர்கள் கூட்டுறவு சங்க மன்னார்புரம் மற்றும் வாமடம் அங்காடிகள், திருவானைக்கோயில் கூட்டுறவு சங்க திருவானைக்கோயில் அங்காடி ஆகிய 14 விற்பனை அங்காடிகளிலும்

மதுரை மாநகரில் மதுரை பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அரண்மனை சாலை, திருநகர் மற்றும் அழகப்பன் நகர் அங்காடிகள், டி.வி.எஸ் கூட்டுறவு சங்கத்தின் டி.வி.எஸ் நகர் அங்காடி, மதுரா கோட்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பொன்னகரம் மற்றும் கே.கே.நகர் அங்காடி, மதுரை பெண்கள் கூட்டுறவு சங்க ரேஸ் கோர்ஸ் காலனி அங்காடி, தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையின் பழங்காநத்தம் மற்றும் கே.புதூர் அங்காடிகள், ஸ்ரீ மீனாட்சி மில் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையின் சுந்தரராஜபுரம் அங்காடி மற்றும் திருமங்கலம் மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு சங்க திருமங்கலம் அங்காடி ஆகிய 11 விற்பனை அங்காடிகளிலும் ஆக மொத்தம் 91 விற்பனை அங்காடிகள் வாயிலாக இறக்குமதி துவரம்பருப்பு ½ கிலோ ரூ.55– மற்றும் 1கிலோ ரூ.110- என்ற அடிப்படையில் நேற்று முதல் விற்பனை செய்யப்பட்டது.

அனைத்து கடைகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது. ஒவ்வொரு கவுண்டரிலும் மக்கள் நீண்ட கியூவில் நின்றார்கள்.பருப்பு வாங்கி சென்றவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தார்கள்.எங்களுக்கு 100 ரூபாய் மிச்சம். இது அம்மா தந்த

தீபாவளி பரிசு அவருக்கு எங்கள் நன்றி என்று வாங்கி சென்றவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

**சென்னையில் கனமழை: பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை; பல்கலைக்கழக தேர்வு வழக்கம்போல் நடைபெறும்**



கனமழை காரணமாக சென்னையில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னை பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டபடி செமஸ்டர் தேர்வுகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இதனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக கன மழை பெய்து வருகிறது.

கடந்த இரண்டு நாட்களாக சென்னையில் கன மழை பெய்து வருகிறது. நேற்றிரவு விடிய, விடிய மழை பெய்துள்ளது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் காலையிலும் நல்ல மழை. எனவே, சென்னையில் பள்ளி,

கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து சென்னை மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி உத்தரவிட்டுள்ளார்.

செமஸ்டர் தேர்வு நடைபெறும்:

சென்னை பல்கலைக்கழக மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில் திட்டமிட்டபடி செமஸ்டர் தேர்வுகள் நடைபெறும் என துணை வேந்தர் தாண்டவன் அறிவித்துள்ளார்.

**மழை சேதங்களுக்கு உடனடி நிவாரணம்: அமைச்சர் உதயகுமார் தகவல்**



தமிழகம் முழுவதும் நிவாரணப் பணிகள், முன்னேற்பாடுகள் குறித்த் ஆய்வுக் கூட்டம் சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் வருவாய துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நேற்று நடந்தது. வருவாய் நிர்வாக ஆணையர் அதுல்ய மிஸ்ரா, பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் ஆர். லில்லி, சென்னை ஆட்சியர் இ.சுந்தரவல்லில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர் மழையால் ஏற்படும் சேதங்களுக்கான நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்பட்டு வருவதாக வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை பரவ லாக பெய்து வருகிறது. மழைக்காலத்தில் வருவாய்த் துறை சார்பில் மாவட்டங்களில்

மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் சென்னையில் நேற்று ஆய்வு மேற்கொண்டார். வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் செயல்படும் 24 மணி நேர அவசர கட்டுப்பாட்டு மையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தென் மாவட்டங்களில் தொடர்மழையால் ஏற்பட்டுள்ள சேதங்களை ஆய்வு செய்த பிறகு அமைச்சர் கூறியதாவது:

தமிழகத்தில் தொடர்மழை பெய்துவரும் பகுதிகளில் அமைச் சர்கள் மற்றும் அலுவலர்கள் விரைந்து சென்று நிவாரணப் பணிகளை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.


**நிவாரணம் உயர்வு**

பேரிடர்களின்போது உயிரிழந் தோர் குடும்பங்களுக்கான நிவாரணத் தொகையை ரூ.2.50 லட்சத்தில் இருந்து ரூ.4 லட்சமாக முதல்வர் ஜெயலலிதா உயர்த்தியுள்ளார். மேலும், கால்நடைகள் இழப்பு ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரமாக வும், ஆடுகளுக்கு ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.3 ஆயிரமாகவும், பகுதியாக சேதமடையும் குடிசைகளுக்கு ரூ.2,500-ல் இருந்து, ரூ.4,100 ஆகவும் இழப்பீடு உயர்த்தப்பட் டுள்ளது.

இதுதவிர, முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.5 ஆயிரம் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. நிவாரண உதவிகள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

**மறைந்தது வேளாண் விருட்சம்**



இயற்கை வேளாண்மையின் காந்தி' என்று புகழப்படும் குஜராத்தைச் சேர்ந்த இயற்கை வேளாண் அறிஞர் பாஸ்கர் சவே பற்றி பலருக்கும் தெரிந்திருக்காது. அதேநேரம், விவசாயிகள் தற்கொலை அதிகரித்திருப்பது தொடர்பாக எம்.எஸ். சுவாமிநாதனுக்கு 2006-ல் அவர் எழுதிய புகழ்பெற்ற கடிதம் அவரைப் புகழ் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது. அப்போது எம்.எஸ். சுவாமிநாதன், தேசிய விவசாய கமிஷன் தலைவராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்தக் கடிதத்தில் அரசின் வேளாண் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்து இருந்ததுடன், அடிப்படைக் கட்டமைப்பை மாற்றியமைக்க உடனடியாகச் செயல்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியும் இருந்த பாஸ்கர் சவே, அக். 24-ம் தேதி 94 வயதில் இறந்தார்.

**ஃபுகோகா பாராட்டு**

மூன்று தலைமுறை இயற்கை வேளாண் உழவர்களுக்கு முன்னோடியாகவும் உத்வேகமாகவும் இருந்தவர்தான் பாஸ்கர் சவே. குஜராத்தின் தென்கிழக்கு முனையில் இருந்த வல்சத் மாவட்டம் தேஹ்ரி

என்ற கிராமத்தில் கல்பவிருக்ஷா என்ற இயற்கை வேளாண் பண்ணையை நடத்தி வந்தார்.

உலகப் புகழ்பெற்ற இயற்கை வேளாண் அறிஞரான மசானபு ஃபுகோகா, பாஸ்கர் சவேயின் பண்ணையைப் பார்த்துவிட்டு, 'இது உலகிலேயே சிறந்தது. என்னுடைய பண்ணையையும் விஞ்சியது' என்று பாராட்டியுள்ளார்.

**அறிவுப் பகிர்வு**

ஆரம்பப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்துவந்த பாஸ்கர் சவே, 1956-ல் ஆசிரியர் பணியைத் துறந்து இயற்கை வேளாண்மையில் ஆர்வம் செலுத்த ஆரம்பித்தார். இயற்கை வேளாண்மையில் நிறைய பரிசோதனைகளையும் புதிய முயற்சிகளையும் மேற்கொண்டார்.

பாஸ்கர் சவேயின் வேளாண் முறைகளும் கற்பித்தலும் இயற்கையில் இருந்த கூட்டு வாழ்க்கையைப் பற்றிய ஆழமான புரிதலின் அடிப்படையில் உருவானவை. இயற்கையின் சுழற்சியைத் தொந்தரவு செய்ய அவர் விரும்பியதே இல்லை. ஆரோக்கியமாகவும், கவுரவமாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கான ஒரே வழி இயற்கை வேளாண்மை மட்டுமே என்று வலியுறுத்தினார். ஆர்வத்தோடு வந்த அனைவருக்கும் மகிழ்ச்சியாகவும் இலவசமாகவும் தன்னிடம் இருந்த அறிவைப் பகிர்ந்தளித்துவந்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த இயற்கை வேளாண் இயக்கங்களின் சர்வதேசக் கூட்டமைப்பு (International Federation of Organic Agriculture Movements - IFOAM), 2010-ல் வாழ்நாள் சாதனையாளர் விருதை இவருக்கு வழங்கியது. 'இயற்கை வேளாண் உலகில் தலைசிறந்தவர்களில் ஒருவர்' என்று அப்போது அவர் பாராட்டப்பட்டார்.

**ஜீரோ பட்ஜெட்**

பாஸ்கர் சவேயின் 10 ஏக்கர் பண்ணையில் பல்வேறு பயிர்கள் கலந்து பயிரிடப்பட்டுள்ளன. நிரந்தரத் தோட்டப் பகுதியில் தென்னை மரம், சப்போட்டா, இரண்டு ஏக்கரில் அரிசி, பருப்பு உள்ளிட்ட பருவகாலப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. மற்றொரு இரண்டு ஏக்கரில் அப்பகுதியில் அதிகம் விரும்பப்பட்ட தென்னை நாற்றுகள் வளர்க்கப்பட்டன. இந்தப் பண்ணையின் விளைச்சல், விளைச்சல் தந்த ஊட்டச்சத்து - சுவை, பல்லுயிர் தன்மை, வளம்குன்றாத தன்மை, நீர் சேகரிப்பு, எரிசக்தி சேமிப்பு, பொருளாதார லாபம் ஆகிய அனைத்து அம்சங்களும் வேதி வேளாண்மையைவிட சிறந்த முறையில் இருந்தன. அது மட்டுமல்ல, வேலையாட்களுக்கான தேவை குறைவாக இருந்தது, உரம், பூச்சிக்கொல்லி போன்ற எந்த வெளிப்பொருட்களும் பயன்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை. சுருக்கமாக ஜீரோ பட்ஜெட் வேளாண்மையாக இருந்தது. இயற்கை வேளாண் பயிற்சி மையத்தின் சார்பில், பலருக்கும் இயற்கை வேளாண்மை அடிப்படைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

**முன்னத்தி ஏர் 7: தமிழ் தந்த சொத்து 'அரிசி'**



உலகில் அரிசி உண்ணும் மிகவும் பழமையான இனங்களில் தமிழினமும் ஒன்று. அலெக்சாண்டர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்புவரை, அரிசியைப் பற்றி ஐரோப்பியர்களுக்குத் தெரியாது. அலெக்சாண்டருடன்

வந்த அரிஸ்டாட்டில் அன்றைய சிந்து ஆற்றின் (Indus river) தென்புறமுள்ள அனைத்து அறிவுச் செல்வங்களையும் பெரியதொரு குழுவினருடன் வந்து திரட்டிச் சென்றுள்ளார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அதில் அரிசியும் ஒன்று என்பது சுவையான செய்தி.

பல மேல்திசை, கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் அரேபிய வணிகர்களால் அரிசி கொண்டு செல்லப்பட்டது. கி.மு. 300-களில் எகிப்து, எத்தியோப்பியா, பாரசீகம் (இன்றைய ஈரான்) உள்ளிட்ட ஆப்பிரிக்கக் கடலோர நாடுகளுக்கு அரிசி கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர்த் தோன்றிய ரோமப் பேரரசின் (இன்றைய இத்தாலி) கீழ் இருந்த சிசிலி வழியாக, ஸ்பெயின் நாட்டுக்கு அரிசி சென்றது. வாவிலோவ் என்ற ரஷ்ய அறிஞர் உலகில் உள்ள பயிரினங்களின் தோன்றிய இடங்களைக் கண்டறிந்து கூறியவர். இந்தியாவில் இருந்து அரிசி தோன்றியதாக அவர் குறிப்பிடுகிறார். சீனாவிலிருந்து உலகம் முழுவதும் அரிசி பரவியதாக மற்றொரு கருத்தும் உண்டு.

**எப்படிப் போனது அரிசி?**

பொதுவாக அரிசி எனப்படுவது நெல்லிலிருந்து பிரித்து எடுக்கப்படும் பொருள். நெல் என்பதற்கும் அரிசி என்பதற்கும் வேறுபாடு உண்டு. நெல்லுக்கு paddy என்று ஆங்கிலத்தில் சொல் உள்ளது. ஆனால், அச்சொல் கி.பி. 17-ம் நூற்றாண்டில்தான் ஆங்கில அகராதிக்குள் வருவதாக, ஆங்கில வேர்ச்சொல் அகராதிகள் குறிப்பிடுகின்றன. அதற்கு முந்தைய சொல்லான நெல் என்பதை rice என்றே அகராதிகள் குறிப்பிடுகின்றன.

இதன் மூலச் சொல் எங்கிருத்து வந்தது என்றால் பதிமூன்றாம் நூற்றாண்டில் ஆங்கில அகராதிக்குள் வருகிறது. அதன்மூலம் எங்கு என்று தேடினால், அது இத்தாலி மொழியில் rizo என்ற சொல்லில்

இருந்து வந்ததாகக் குறிக்கின்றனர். அந்தச் சொல்லோ orisa என்ற லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து வந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. லத்தீன் மொழி பேசிய பகுதிகள் கிரேக்க, ரோமப் பேரரசுப் பகுதிகள். அங்கு நெல் விளைவதே கிடையாது. கி.பி. 1475-க்குப் பிறகுதான் நெல் சாகுபடி இத்தாலிக்கு வருகிறது. அதற்கு முன்பு அவர்கள் அரிசியை ஒரு மருத்துவப் பொருளாகவே இறக்குமதி செய்துள்ளார்கள் என்று ஆலன் டேவிட்சன் என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

**தமிழே வேர்**

ஆக, நெல்லே விளையாத நிலத்திலிருந்து ஒரு சொல் எப்படி உருவாகும்? ஆகவே, இந்த அரிசி என்று புரிந்துகொள்ளப்பட்ட நெல் என்ற சொல்லின் மூல வேர் தமிழிலேதான் உள்ளது. ஏனென்றால் அரிதல், அரித்தல் என்ற சொற்கள் நெல்லில் உள்ள உமியை நீக்குகின்ற செயலைக் குறிப்பிடுகின்றன. அவ்வாறு 'அகற்றுதல்' என்ற பொருளில் அரிசி என்ற சொல் உருவாகியுள்ளது. இது பல மொழிகளுக்குப் பயணம் செய்து, இன்றைக்குச் சமைக்கப்பட்ட சோற்றையே நாம் rice என்று குறிப்பிடும் அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு நெல்லின் வரலாற்றை இழந்த தமிழினம், பசுமைப் புரட்சிக்குப் பின்னர் மரபுச் செல்வமான நெல் இனத்தையும் இழந்தது. பல நூறு வகையான நெல் இனங்கள் இருந்த மண்ணில், பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த மணிலாவிலிருந்து வந்த வீரிய ரகம் என்று சொல்லப்பட்ட சோதா நெல் ரகங்கள் வந்தேறிவிட்டன.

**நெல் காப்பாளர்**

இதன் விளைவு... நோயும் நீர்ப் பற்றாக்குறையும் வந்தன. இந்தச் சூழலில், இருக்கின்ற மரபு நெல் இனங்களைக் கண்டறிந்து அவற்றைப் பெருக்கும் முயற்சியில் தமிழகத்தில் முதலில் களமிறங்கியவர்,

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகேயுள்ள வளையாம்பட்டு என்னும் ஊரைச் சேர்ந்த இயற்கைவழி வேளாண்மை மூத்த முன்னோடிகளில் ஒருவரான வெங்கடாசலம். வயது எண்பதைத் தாண்டிவிட்டாலும், உழைப்பில் இளைஞருக்கும் மேலான வேகம் கொண்டவர். அடிப்படையில் பொறியாளரான இவர், தனது வாழ்நாள் கடமையாக மரபு நெல் விதைகளைப் பாதுகாத்துவருகிறார். இவருடைய பகுதியில் உள்ள 19 வகையான பாரம்பரிய நெல் வகைகளைத் தனது நண்பர்களுடன் இணைந்து பாதுகாத்துள்ளார்.

தூயமல்லி, குள்ளக் கார், கிச்சிலிச் சம்பா, வாடன் சம்பா போன்ற அரிய வகை நெல் இனங்கள் இவரிடம் உள்ளன. இவருடைய நண்பர் ப.தி. இராஜேந்திரன், மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இவருக்கு உறுதுணையாக உள்ளனர். இப்போது களர்ப்பாலை என்ற நெல்லைக் கண்டறிந்து பரப்பும் முயற்சியில் இறங்கியுள்ளார் வெங்கடாசலம்.

**மற்ற மொழிகளில் அரிசி என்ற தமிழ்ச் சொல்லின் மருவல்**

அரபி மொழியில் - அல்ருஸ் (al-ruz)

ஸ்பானிய மொழியில் - அராஸ் (arroz)


லத்தீன் மொழியில் - ஒரைசா (oryza)

இத்தாலியில் - ரைசே (riso)

பிரெஞ்சு மொழியில் - ரிஸ் (riz)

ஜெர்மனியில் - ரெய்ஸ் (reis)

ஆங்கிலத்தில் - ரைஸ் (rice)



**நம்மாழ்வாருடன் வெங்கடாசலம்**

*(அடுத்த வாரம்: ஊட்டம் தரும் இயற்கை)*

***கட்டுரையாளர், சூழலியல் எழுத்தாளர் மற்றும் இயற்கை வேளாண் வல்லுநர்***

***தொடர்புக்கு: adisilmail@gmail.com***

***செங்கம் வெங்கடாசலம் தொடர்புக்கு: 98943 63307***

**துவரம் பருப்பும் பழைய நினைப்பும்!**



துவரம் பருப்பின் அரசியல்’ தலையங்கத்தை வாசித்தவுடன் என்

இளமைக் காலங்கள் நினைவுக்கு வந்தன. 1955 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தில் எங்கு நோக்கினும் கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, குதிரைவாலி, திணை போன்ற புஞ்சை தானியங்களும், துவரை மற்றும் மிளகாய் போன்ற பயிர்களும் செழித்துவளர்ந்ததைப் பார்த்திருக்கிறேன்.

தை பிறந்தவுடனேயே புஞ்சை தானியங்கள் விளைந்து வீட்டுக்கு வந்துவிடும். துவரை மற்றும் மிளகாய் ஆகியன பங்குனி அல்லது சித்திரை மாதத்தில் விளைச்சல் காணும். ஆனால் புஞ்சை தானியங்கள் செழித்து வளர்ந்த பூமியை இன்று வேலிக்கருவை முட்செடிகள் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டன. அரசு இலவசங்களை மக்களுக்கு அளித்ததே தவிர விவசாயக் குளங்களைத் தூர்வாரும் பணியைச் செய்யவில்லை. விளைவு ராமநாதபுரம் மாவட்டத்தில் 1991 முதல் விவசாயம் சிறிது சிறிதாக அழியத் தொடங்கியது.

தமிழகம் முழுவதும் இன்று இதே நிலைதான். இலவசங்கள் மூலம் தனது வாக்குவங்கியைத் தக்க வைத்துக்கொள்வதில் அரசு ஆர்வம் காட்டியதே தவிர, நலிந்துபோன விவசாயத்தை மீட்டெடுப்பதில் அக்கறை காட்டவில்லை. எனவேதான் இன்று விண்ணை முட்டுகிறது பருப்புகளின் விலை.

***- சசிபாலன், 'தி இந்து' இணையதளத்தில்...***

'துவரம் பருப்பின் அரசியல்' கட்டுரை வாசகர்களைச் சிந்திக்கவைப்பதுடன் அறுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழகத்தையும் நினைவுபடுத்துகிறது. இந்தியாவின் பாரம்பரிய புஞ்சைப் பயிர் வகைகளான சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட தானியங்கள். இவை அனைத்தும் மறைக்கப்பட்டு மக்காச்சோளமாக தலையாட்டம் போடுவதை கூர்மையாக விமர்சித்துள்ளார் கட்டுரையாளர்.

**ஆரோக்கியமான நாடு பட்டியலில் இந்தியாவுக்கு 103-வது இடம்**

உலகின் ஆரோக்கியமான நாடு தரவரிசைப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியா 103-வது இடத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளது.

ஐ.நா. சபை, உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்து 'புளூம்பர்க் ரேங்கிங்' அமைப்பு உலகின் சுகாதாரமான நாடுகள் குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரம், சத்தான உணவு வகைகள், ஆயுட்காலம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஆய்வறிக்கை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மொத்தம் 145 நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. இத்தாலி, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, ஜப்பான், ஸ்பெயின், நெதர்லாந்து, சுவீடன், ஜெர்மனி ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. அமெரிக்கா 21-வது இடத்திலும் பிரிட்டன் 21-வது இடத்திலும் ரஷ்யா 97-வது இடத்திலும் உள்ளன.

அண்டை நாடுகளான சீனா -55, இலங்கை -56, பாகிஸ்தான் 100-வது இடத்தில் உள்ளன. இந்தியா 103-வது இடத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளது.

விகடன்

**துயரம் பருப்பு சாரி... மலிவு விலை துவரம் பருப்பை வாங்க அலை மோதும் கூட்டம்!**

தமிழ்நாட்டில் பொது மக்களின்சிரமத்தை போக்கும் வகையில், கூட்டுறவு அங்காடிகளில் இன்று முதல் கிலோ ரூ. 110 ரூபாய்க்கு துவரம் பருப்பு விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.




மாநிலம் முழுவதும் 91 இடங்களில் உள்ள அரசு பண்டக சாலைகளிலும், அமுதம் சிறப்பங்காடிகளிளும் இந்த விற்பனை நடைபெற்று வருகின்றது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய பெருநகரங்களில் உள்ள கூட்டுறவு பண்டக சாலை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தால் நடத்தப்படும் பல்பொருள் அங்காடிகளில் மலிவு விலை துவரம் பருப்பு விற்பனை தொடங்கப்பட்டது. அரைகிலோ துவரம் பருப்பு 55 ரூபாய்க்கும் ஒரு கிலோ 110 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மலிவு விலை துவரம் பருப்பு பாக்கெட்டுகளை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். இதனால் அரசு அங்காடிகளில் இன்று வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக காணப்பட்டது. பருப்பு விளைச்சல் குறைவானதாலும் பதுக்கலாலும் ஆயுதபூஜை பண்டிகையன்று கிலோ 220 ரூபாய்க்கு மேல் துவரம் பருப்பு விற்பனையானது. தொடர்ந்து

வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்து மக்களுக்கு மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை தீவிரம்: தமிழ்நாடு, புதுச்சேரியில் மழை நீடிக்கும் என்கிறார் ரமணன்!

**சென்னை:** மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கனமழை நீடிக்கும் என்று வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்து உள்ளார்.



வடகிழக்கு பருவமழை தமிழ்நாடு மற்றும் கேரளாவில் தீவிரம் அடைந்துள்ளது. கடந்த 5 நாட்களாக தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. சென்னையில் கோயம்பேடு, அண்ணாநகர், முகப்பேர், அம்பத்தூர், கிண்டி, அடையார், மைலாப்பூர், நெற்குன்றம், திருமங்கலம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் நேற்று இரவு முதல் கனமழை பெய்து வருகிறது.

சாலையில் ஆங்காங்கே மழை நீர் தேங்கி உள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வாகனங்கள் சாலைகளில் ஊர்ந்து செல்கின்றனர். இந்நிலையில், சென்னையில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் விடுமுறை அறிவித்து உத்தரவிட்டுள்ளார். அதேபோல்,

கன்னியாகுமரியிலும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

கனமழை குறித்து சென்னை மண்டல வானிலை மைய ஆராய்ச்சி இயக்குனர் ரமணன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "அரபிக்கடலில் உருவான 'சபாலா' புயல் ஏமன் நாட்டில் ரியா நகருக்கு 740 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த புயல் மேலும் மேற்கு நோக்கி நகர்ந்து நாளை (செவ்வாய்க்கிழமை) ஏமன் நாட்டு கடற்கரையில் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குமரிக்கடலில் நிலை கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 10 செ.மீ.மழை பெய்துள்ளது. குமரிக்கடலில் நிலவி வந்த மேலடுக்கு சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவு பகுதியில் நிலை கொண்டுள்ளது.

அதன் காரணமாக அடுத்த 24 மணிநேரத்தில் இன்று (திங்கட்கிழமை) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் கனமழை பெய்யும். மேலும், மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. உள் மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யும். சென்னை நகரிலும் சில இடங்களில் அவ்வப்போது கனமழை பெய்யும்" என்றார்.

கனமழை: சென்னை, குமரியில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிப்பு!

**சென்னை:** கனமழை காரணமாக சென்னையில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.



வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. கடந்த இரண்டு நாட்களாக சென்னையில் பெய்து வரும் கனமழை காரணமாக சாலைகளில் ஆங்காங்கே மழை நீர் தேங்கி போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், சென்னையில் நேற்று இரவு முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து சென்னை மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பலத்த மழை பெய்து வருவதால் அங்குள்ளப் பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால், சென்னைப் பல்கலைக் கழக பருவமுறைத் தேர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று பலகலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளர்.மேலும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளிலும் செமஸ்டர் தேர்வு திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.